விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 05 திங்கட்கிழமை (18.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 120

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# பேச்சுத் தவிர்ந்த மாற்றுவழிகளை எத்தரப்பும் தெரிவுசெய்ய முடியாது

## புத்தளத்தில் எரிக் சொல்ஹெய்ம்



(புத்தளத்திலிருந்து நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கு ஒரேவழி சமாதானப் பேச்சுவார்த்தையே. இதனைவிடுத்து மாற்றுவழி எதனையும் எவராலும் தெரிவுசெய்ய முடியாது. முஸ்லிம்களின் பங்களிப்புடன் அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து மேற்கொள்ளும் பேச்சுவார்த்தையின் மூலமே சமாதானத்திற்கான தீர்வை அடைந்து கொள்ளமுடியுமென நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

நேற்று புத்தளத்திற்கு விஜயம்செய்த எரிக் சொல் ஹெய்ம் அப்பகுதி மக்கள் முன்னிலையில் உரை யாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட-கிழக்கில் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்ட மைப்புக் குறித்த இணக்கப்பாட்டில் முஸ்லிம்களின் கருத்துக்களும் உள்வாங்கப்படும். விடுதலைப் புலிகளும் அரசாங்கமும், முஸ்லிம் தரப்பும் இதில் அங்கத்துவம்பெறும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுகவீனத்தால் போராளி சாவு

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக விடுதலைப் புலிப்போராளி ஒருவர் நேற்று முன்தினம் சாவடைந்துள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த வீர வேங்கை இயற்கதிர் (விஜயகுமார் விஜிதன்) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இந்த மாவீரரின் வித்துடல் நேற்று அவரது இல்லத்திலிருந்து எடுத்துவரப்பட்டு உரும்பிராய் அண்ணா சனசமூக நிலையத்தில் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவை மாவட்ட மக்களுக்கு பாதுகாப்பு வழங்கக் கோரிக்கை

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்தில் கருணா தரப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுவருவதால் அப்பகுதி மக்களுக்கு பாதுகாப்பு வழங்குமாறு மாவட்டச் செயலாளர் ரஞ்சித் விஜயதிலக கோரியுள்ளார்.

மட்டக்களப்பு எல்லைப் பகுதிகளில் கிட்டத்தட்ட 30 பேர் கடந்த இரு மாதங்களில் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களது மோதலால் அப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் கோரியுள்ளார்.

மேலும், புலிகளும் கருணா தரப்பினரும் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுதந்திரமாக நடமாடித்திரிவதாகவும், கருணா தரப்பினர் சிங்கள மக்களிடம் வரிவசூலித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஊர்மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக விஜயதிலக கூறியுள்ளார். தற்போது மேலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வெள்ளியன்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை கிடைக்கும்வரை காத்திருப்பதாகப் பிரதிப் பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு உதவிகள் குறித்து கணக்கு வழக்குப் பேணப்படும்

### நிதியமைச்சர் உறுதியளிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிடமிருந்து இலங்கை அரச சாங்கத்துக்குக் கிடைக்கும் உதவிகள் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளின் உதவிகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் குறித்து நாம் கவனத்தில் எடுத்துள்ளோம். வெளிநாட்டு உதவிகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக கொள்வனவுச் செயற்பாடுகளை துரிதப்படுத்தவும், கணக்கு வழக்குகளையும் - முகாமைத்துவ செயற்பாடுகளையும் மறுசீரமைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

கடன்கள், அன்பளிப்புக்கள் வாயிலாக வருடாந்தம் 100 கோடி அமெரிக்க டொலர்களை பெறமுடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(த-08)

## பிரதேச செயலரின் கொலை விசாரணை குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைப்பு

## வெள்ளவத்தை வாய்க்காலிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் யாருடையவை

கோரியுள்ளார். பாதுகாப்பு (12 ஆம் பக்கம் பார்க்க) கண்காணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் கிறது. (த-08)

## பிரதேச செயலரின் கொலை விசாரணை குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிர தேச செயலாளர் ஏ.கே.தவராஜாவின் படு கொலை தொடர்பான விசாரணைகளை நடத்தும் பொறுப்பு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளதென பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பொலிஸாரினால் மேற் கொள்ளப்பட்டுவந்த விசாரணைகள் நேற்று தொடக்கம் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இக்கொலை தொடர்பான விசாரணை களை மேற்கொள்ளவென குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் திருக்கோவில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சியை உடைக்க ஜே.வி.பி திரைமறைவில் சதி

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஆட்சியிலிருந்து கவிழ்ப்பதற்கு ஜே.வி.பி திரைமறைவில் சதிசெய்துவருவதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

ஜே.வி.பியுடன் மிகவும் நெருங்கியவரான அமைச்சர் மங்கள சமரவீரவுடன், அமைச் சர் அனுரா பண்டாரநாயக்கவையும் இணைக் கும் வேலையில் ஜே.வி.பி முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது. இப்பணியை அதன் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்சவிடம் உயர்பீடம் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட விமல் வீரவன்ச இரு அமைச்சர்களையும் சந்தித் துள்ளதாகவும், ஏனைய சில அமைச்சர் களையும் பிரதி அமைச்சர்களையும் சந்திப் பதற்கு அவர் முயன்று வருவதாகவும் கூறப் படுகிறது. (ச)

## வெள்ளவத்தை வாய்க்காலிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் யாருடையவை

### தாயும், பிள்ளைகளும் தற்கொலை செய்துகொண்டனரா?

தெஹிவளை, வெள்ளவத்தை எல்லைப் பகுதியில் உள்ள வாய்க்காலிலிருந்து மீட் கப்பட்ட 3 சடலங்களும் இதுவரை அடை யாளம் காணப்படவில்லை என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பாலத்திலிருந்து நீரோடையில் குதித்து தற்கொலை செய்தி ருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளி யிட்டனர். நேற்று அதிகாலை அளவில் சட லங்கள் மீட்கப்பட்டன. பெண் ஒருவரினதும், சிறுவர்கள் இருவரினதும் சடலங்களே மீட் கப்பட்டவையாகும். உயிரிழந்த பெண் 25-30 வயதிற்கு உட்பட்டவராவார். சிறுவர்கள் 4 மற்றும் 6 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை அடையாளம் காண உதவு மாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுள் ளனர். (த-08)

## மினிபஸ் போக்குவரத்து நேற்றுத் தடைப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகமாலை ஏ-9 வீதியூ டான தனியார் போக்குவரத்துச் சேவைகள் நேற்று நடைபெறவில்லை.

நேற்று முன்தினம் இருபாலையில் வைத்து தனியார் மினிபஸ் எரிக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்ட சிற்றூர்தி போக்கு வரத்துச் சேவைச் சங்கத்தினர் பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனாலேயே நேற்று ஏ-9 வீதியூடான போக்குவரத்து நடைபெறவில்லை. இன்று முதல் சேவை நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை பொதுமக்கள் மினிபஸ்சை எரிக்க முற்பட்டசமயம் பொலிஸார் எவ்வித நடவடிக்கையினையும் எடுக்கவில்லையென சிற்றூர்திசேவைச் சங்கம் குற்றஞ்சாட்டியுள் ளது. (ச-4)



யாழ் கொழும்பு
EXPOAIR
your friend in the skies...
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891/6297, 0772 348888, 0772 349999
E-Mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
வானத்தில் உங்கள் நண்பன்...

# வடக்கு-கிழக்கு மாகாண கடற்பிராந்தியம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குக் கடற்பிராந்தியம் முழுவதும் அது உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நவீனரக நீர்முழ்கிக்கப்பல் இருப்பதாக புலனாய்வு அறிக்கையின் மூலம தெரியவந்திருப்பதையடுத்தே கடற்படையினர் அதிஉயர் பாதுகாப்பு வலையப்பிரகடனத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு-கிழக்குக் கடற்பிராந்தியத்தில் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நீர்மூழ்கிக்கப்பல்களின் நடமாட்டங்களை கண்காணிக்கும் விசேட ராடர் கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கு கடற்படை முனைப்புக் காட்டிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்தியக் கட்டளைத்தளபதி அட்மிரல் பலோனின் கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டு ஆலோசிக்கப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அமெரிக்காவிடமிருந்து அல்லது அதன் நேசநாடு ஒன்றிடமிருந்து இந்த நவீன ராடர் கருவிகள் மற்றும் கடலுக்குள் தாக்குதல் நடாத்தும் ஏவுகணைகள் போன்றவற்றை இலங்கைக் கடற்படையினர் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் படைத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-4)

# அமெரிக்க விசா பெறுவதில் மோசடி; சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(கொழும்பு)

அமெரிக்க விசா பெறுவதற்கு போலி ஆவணங்கள் சமர்ப்பித்த மற்றும் பொய்யான ஆவணங்களைத் தயாரித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலைய முகாமைத்துவப் பணிப்பாளர் உட்பட்ட ஏழு சந்தேக நபர்களையும். நாளை செவ்வாய்க்கிழமை வரை விளக்க மறியலில் வைக்கும் படி கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவானும் மாவட்ட மேலதிக நீதிபதியுமாகிய சரத் சீ.கருணாரத்ன உத்தரவிட்டார்.

வெள்ளவத்தை மாயா அவன்யூ, இல 126 இல் இயங்கி வரும் அல்கரீம் லங்கா பிரைவேட் லிமிட்டட் முகாமைத்துவப் பணிப்பாளர் சின்னத்தம்பி கணேசதாசன், உட்பட ஜோசப முருகேசு, நில்மொஹான், மயில்வாகனம் பிரதீபன், சிவயோகம் பெபோஷன், சிவனந்தன் விநோதன், ராமச்சந்திரன் ராஜீவ் மற்றும் சுப்பிரமணியம் உதயகுமார் ஆகியோரையே விளக்கமறியலில் வைககும படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

மய்கொசியான் அரச குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கடிதமொன்றை சமர்ப்பித்து, குறிப்பிட்ட பிரதேசத்துக்கு செல்வதற்கு அமெரிக்க விசா வேண்டி அனுப்பப்பட்டிருந்த விண்ணப்பங்கள் மீது இலங்கை அமெரிக்க தூதரகம் சந்தேகம் கொண்டு விசாரணைகளை முடுக்கிவிட்டிருந்தது.

இதனபடி விசாரணை நடாத்திய அதிகாரிகள் குறிப்பட்ட மய்கொசியான் அரச குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து எதுவித கடிதங்களும் அனுப்பப்பட்டிருக்கவில்லை என்பதை கண்டுபிடித்தது.

இதன் பிறகு குறிப்பிட்ட வேலைவாயப்பு முகவர் நிலைய பணிப்பாளர் மற்றும் அறுவரையும் கொழும்பு குறறத்தடுப்பு விசாரணைப்பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் மோசடிகள் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தியது.

இதன்போதே மேற்படி ஏழு பேரையும் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்திரவிட்டது.

இதேவேளை, இலங்கையர் 12 பேருக்கு அமெரிக்காவில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறியே மேற்படி அமெரிக்க விசா வேண்டிய விண்ணப்பங்கள் இலங்கை அமெரிக்க தூதரகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

பேராதனை வைத்தியசாலையில்

# வைத்தியர், தாதியர்கள் டெங்குவால் பாதிப்பு

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் 33 பேர் நேற்றுமுன்தினம் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த 33 பேரில் 15 பேர் வைத்தியசாலை ஊழியர்கள் எனவும் அவர்களில் வைத்தியர்கள், தாதிமார் உட்பட ஏனைய ஊழியர்களும் அடங்குவதாகவும் பேராதனை வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் அன்வர் தெரிவித்திருக்கிறார்.

மயோக்கா ரைட்டிஸ் நோயினால் உயிரிழந்த வைத்திய மாணவி தங்கியிருநத அறையில் மற்றுமொரு மாணவிக்கு வைரஸ் தொற்றியதை அடுதது வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மேலும்தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் வைரஸ் காய்ச்சலால் பிடிக்கப்பட்டு மரணமான இருவரும் மாவனல்ல, கொத்மலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரத்தில் பேராதனை வைததியசாலையில் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்ட 75 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலையின பிரதிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

மயோக்கா ரைட்டிஸ் நோயினால் உயிரிழந்த வைத்திய மாணவி மற்றும் ஏனைய இரண்டு நோயாளர்களின் உடல் கூறுகள் பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# அரச அதிகாரிகள் தொடர்பாக முறைப்பாடுகள் குவிகின்றதாம்

## பொது நிர்வாக அமைச்சின் அதிகாரி தகவல்

(கொழும்பு)

அரச ஊழியர்கள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக பொது நிர்வாக அமைச்சில் செயற்படுகின்ற விசேட பிரிவுக்கு அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் கூறினார்.

முறைப்பாடுகள் தொடர்பாக தற்போது வெளிமாவட்டங்களில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

அரச ஊழியர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் நிருபிக்கப்படுமிடத்து குறிப்பிட்ட அரச ஊழியருக்கு எதிராக கடுமையான நட்வடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் அரச ஊழியர்கள் விணைத்திறனான முறையில் செயற்படுவதில்லையென்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக மக்கள் மத்தியில் நிலவி வருகின்றது.

எனவே, இது தொடர்பான முறைப்பாடுகளை மக்களுக்குத் தெரிவிக்க வசதியாக பொது நிருவாக அமைச்சில் விசேட பிரிவொன்றை நிறுவினோம்.

தற்போது மேற்படி பிரிவின் ஊடாக பல முறைப்பாடுகள் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்றன.

அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளவதற்காக அமைச்சின் ஊழியர்கள் குறிப்பிட்ட பிரதேசங்களுக்குச் சென்றுள்ளனர்.

அத்துடன், சுனாமி நிவாரண நடவடிக்கைகளில் ஊழல் புரிவதாகவும் அரச ஊழியர்களுக்கு எதிரா[illegible] பொதுமக்களிடமிருந்து பல முறை[illegible]பாடுகள் வருகின்றன.

அரச ஊழியர்கள் தொடர்பா[illegible] முறைப்பாடுகளை பொதுமக்க[illegible] அலுவலக நேரங்களில் கொழு[illegible]பில் உள்ள பொது நிருவாக அமை[illegible]சுகககு அறிவிக்கமுடியும் என்றார். (க)

# இராவணன் எல்ல நீர்வீழ்ச்சிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கவனத்துக்கு

(கொழும்பு)

பண்டாரவளைக்கும் வெள்ள வாயாவிற்கும் இடையில் இருக்கும் இராவணன் எல்ல நீர்வீழ்ச்சியினைப் பார்ப்பதற்கு வரும் சுற்றுலா பிரயாணிகளுக்கு நீர்வீழ்ச்சி அமைந்து இருக்கும் கற்பாறைகளில் ஏறவேண்டாமென பண்டாரவளை எல்ல பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் பெய்து வரும் மழையுடனான காலநிலையால் இங்கு காணப்படும் கற்பாறைகள் தற்போது பாசியுடனான வழுவழுப்புத் தன்மையுடன் இருப்பதும், நீர்வீழ்ச்சிக்கு மேல் பிரதேசத்தில் பெயயும் மழைகாரணமாக நீர் வீழ்ச்சியில் அடிக்கடி நீர்கூடி குறைவதும இதற்கு முக்கிய காரணமாகும்.

கடந்த சில நாட்களில் இந்த நீர்வீழ்ச்சியைப் பார்க்க வந்து கற்பாறைகளில் ஏறமுயன்ற 19 பேர் தவறிவிழுந்து மரணமாகியுள்ளனர். என பண்டாரவளை எல்ல பிரதேச பொலிஸார் தெரிவிக்கின்றனர். (க-9)

# இராசி பலன்

18.04.2005
(சித்திரை 5, திங்கட்க்கிழமை)
நவமி முற்பகல் 11.42 மணிவரை
ஆயிலியம் பின்னிரவு 02.39 மணிவரை
இராகுகாலம் 07.33 - 09.03 மணிவரை
சுபநேரம் 12.03 - 01.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மாதாசுகம், உணர்ச்சிவசப்படல், காரிய தாமதம், கல்வியில் ஆர்வம். |
| இடபம் | இனிய அனுபவம், அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, காரிய அனுகூலம். |
| மிதுனம் | மதிப்புக்குறைவு, தொழில் நன்மை, போசன சுகம், முயற்சி தாமதம். |
| கடகம் | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், விருத்துபசாரம். |
| சிங்கம் | பிரயாண அலைச்சல், சுபகாரியச் செலவு, குடும்ப நலம், தந்தை வழி உறவு. |
| கன்னி | எடுத்தகாரியம் கைகூடும், சிந்தனை மிகுத', பிறருக்கு உதவுதல், போசன சுகம். |
| துலாம் | சுபநிகழ்வு, நண்பர்கள் சந்திப்பு, தொழில் முயற்சி, முயற்சி பலிதம். |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, சரீரப் பிரயாசை, பிரயாணம், ஆன்றோர் மதிப்பு. |
| தனுசு | வீண் தொல்லை, போசன சுகம், அபகீர்த்தி, வாகன பயம். |
| மகரம் | உறவினர் வருகை, நல்ல வரவேற்பு, பிரயாண நன்மை, முயற்சிகைகூடும். |
| கும்பம் | திடீர்பயணம், தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர் உதவி, பணவருவாய். |
| மீனம் | காரிய இடையூ,, போசன சுகக் குறைவு, உடல் நலக் குறைவு, வீண் வார்த்தை. |

பலழய நேரப்பழ கணிப்பிடப்பட்டது

-வளவன்

# திருக்கேதீஸ்வர ஆலய புனரமைப்புப் பணி

மன்னாரில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளுக்காக மாமல்ல புரத்திலிருந்து நூற்றுக் கணக்கான அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த கருங்கற் தூண்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஆலய புனரமைப்புக்குத் தேவையான அனைத்துத் தூண்களும் வந்து சேர்ந்ததும் கோவில் மண்டபங்கள் அனைத்தும் தனிகருங்கந்தூண்களால் அமைக்கப் படவுள்ளதாக அறியப்படுகிறது.

16 ஆம் நூற்றாண்டில் தனிக் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருந்த இவ்வாலயம் போத்துக்கேயரின் ஆட்சியின் போது ஏனைய ஆலயங்களைப்போல அழிக்கப்பட்டது. பின்னர் ஆறுமுக நாவலின் வேண்டு கோளுக்கமைய மீள அமைக்கப்பட்டது. தற்போது இரண்டு இராஜ கோபுரங்களுடன காணப்படும் இவ்வாலயத்தைப் புனரமைக்கும் வேலையில் ஆலயநிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

தற்போதுள்ள மண்டபங்களின் சீமெந்துத் தூண்க்ளை அகற்றி கருங்கற் சிற்பத்தூண்களை அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதற்கென நூற்றுக்கணக்கான சிற்பத்தூண்டுகள் கப்பல்களில் கொண்டுவரப்பட்டு. கனரக வாகனம் மூலம் மிகுந்த பாதுகாப்பான முறையில் திருக்கேதீஸ்வரத்துக்குக் கொண்டுவரப்படுவதாகவும் அறியப்படுகிறது. தேவையான கற்தூண்கள் முழுமையாக வந்து சேர்ந்ததும் கோவல் மணடபங்கள் கருங்கல் தூண்களால் அமைக்கப்படும்(து-101)

# நூல் மீள் பதிப்பு வெளியீட்டு விழா

"செந்தமிழ்ச் செம்மல் கதிரவேற்பிள்ளை" என்னும் நூலின் மீள்பதிப்பு வெளியீட்டுவிழா மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூகநிலைய மண்டபத்தில் சட்டத்தரணி என்.தங்கராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ஆசிரியர் எஸ்.செல்வநாயகம் நூல்வெளியீட்டுரை நிகழ்த்தினார். 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்புச்சித்திகளைப் பெற்றுக் கொண்ட 17 மாணவர்களுக்கு தர்மகுலசிங்கம் நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இவ் விழாவில் எஸ்.கெங்காதரன், திருமதி பீ.இரத்தினசோதி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். நிலையச் செயலாளர் எஸ்.கண்ணன் நன்றியுரை நிகழ்த்தினார். (7-52)

# வருடாந்த மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை மஞ்சத்திருவிழாவும் 22 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெறும்.

24 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும் தினமும் மாலை 7.00 மணிக்கு ஆசிரியர் செல்வவடிவேலின் சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (7-39)


# விவாத அரங்கு - 8

விடயம்

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால் எமது கலாசாரம்:

- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# பர்வேஷ் முஷாரப் - மன்மோகன் சிங் இருதரப்பு உறவுகள் குறித்தும் ஆராய்வு



(புதுடில்லி)

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுககு மத்தியில் நேற்றுமுன்தினம் இந்தியா சென்ற பாகிஸ்தான் அதிபர் ப்ர்வேஷ முஷாரப் மற்றும் அவரது குழுவினருக்கு விமான நிலையத்தில அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.



மூன்றுநாள் பயணமாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நேற்றுமுன்தினம் நண்பகலில் மனைவி சகபா மற்றும் மந்திரிகள் - அதிகாரிகள் குழுவுடன் தனி விமானத்தில் ஜெய்ப்பூர் சென்றார். விமான நிலையத்தில் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ராஜஸ்தான் முதலமைச்சர் வசுந்தரா ராஜே, ஜெய்ப்பூர் மேயர் அசோக் பர்னாமி ஆகியோர் இவர்களை வரவேற்றனர். அதிபர் முஷாரப்புககும் அவர் மனைவிக்கும் முதலமைச்சர் வசுந்தரா பூச்செண்டு கொடுத்தார்.

வெள்ளைநிற குர்தா,பைஜாமா அணிந்திருந்த முஷாரப் பூச்செண்டை பெற்றுக்கொண்டு தான் இங்கு வந்ததில் மகிழ்ச்சி அடைவதாகக் தெரிவித்தார். பிறகு, முஷாரப் மனைவி மற்றும் மந்திரிகள் 3 விமானப்படை ஹெலிகொப்டர்களில் புறப்பட்டு அஜமீர் தர்கா சென்று தொழுகை நடத்தினர். 30 நிமிடம் தொழுகையை முடித்துக்கொண்டு வெளியே வந்த முஷாரப் எனது நீண்டநாள் ஆசை நிறைவேறிவிட்டது. இங்கு தர்கா பகுதியில் நிற்பது பெருமையாக இருக்கிறது. இந்தியா - பாகிஸ்தானில் அமைதியும், முன்னேற்றமும் ஏற்படவேண்டும் என்று பிரார்த்தனை செய்தேன். அதற்கு நல்ல பலன் கிடைக்கும் என்று கூறினார்.

அங்கிருந்து ஜெய்ப்பூர் திரும்பிய முஷாரப் மற்றும் குழுவினர் அங்கிருந்து தனி விமானத்தில் டில்லி போனார்கள். விமான நிலைய வரவேற்பு முடிந்து முஷாரப் மற்றும் குழுவினர் டில்லி மான்சிங் ஹோட்டலில் தங்கினர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இந்திய வெளியுறவு மந்திரி நட்வர் சிங் அந்த ஹோட்டலுக்குச் சென்று அதிபர் முஷாரப்பைச் சந்தித்துப் பேசினார். இரவு 8.30 மணிக்கு அதிபர் முஷாரப்புக்கும் அவரது குழுவினருக்கும் பிரதமர் மன்மோகன் சிங் விருந்து கொடுத்தார். அப்போது அவர்கள் இருநாட்டு உறவு குறித்து பூர்வாங்கப் பேச்சு நடத்தினர். அதில் காஷமீர் பிரச்சினையும் இடம்பெறறது.

புதுடில்லி கோட்டலா மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகிய 6ஆவதும் இறுதியுமான கிரிக்கெற் போட்டியை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் பாகிஸ்தான் அதிபர் சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை கண்டு ரசித்தார்.



**கோட்லா மைதானத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு**

அந்த மைதானத்தைச் சுற்றிலும் வரலாறு காணாத வகையில் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

போட்டியைப் பார்வையிட்ட பின்னர் நேற்று நண்பகல் ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் ஜம்மு-காஷ்மீர் பிரசசினை உட்பட பல்வேறு இருதரப்பு பிரச்சினைகள் குறித்தும் விரிவாகப் பேச்சு நடாத்தப்பட்டது.

இதில் இந்தியாதரப்பில் வர்த்தகத் துறை அமைச்சர் கமல்நாத், வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங், பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரும் பாகிஸ்தான் தரப்பில, வெளியுறவுத்துறை அமைச்சா உள்ளிட்ட 3 முககிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ற)

## 24 பாக். கைதிகள் விடுதலை!

(இஸ்லாமாபாத்)

நல்லெண்ண நடவடிக்கையாக 24 பாகிஸ்தான் கைதிகளை இந்திய அரசு விடுவித்துள்ளது.

பஞ்சாப் மாநில முதல்வர் கப்டன் அம்ரீநதர்சிங் அண்மையில் 3நாள் பயணமாக பாகிஸ்தான் சென்று அந்நாட்டு அதிபர் பர்வேஷ முஷாரப்பை சந்தித்துப் பேசினார். அப்போது பாகிஸ்தான் சிறைகளில் வாடும் இந்தியக் கைதிகளை விடுவிக்க அவர் கோரினார். இதையடுத்து 564 கைதிகளை பாகிஸ்தான் அரசு கடந்த மார்ச் 22ஆம் திகதி விடுவித்தது. அந்தக கைதிகளில் 23பேருடன் அம்ரீந்தர்சிங் இந்தியா திரும்பினார்.

இந்தநிலையில், இந்திய அரசு இப்போது 24 பாகிஸ்தான் கைதிகளை விடுதலை செய்துள்ளது. இதில் 20பேர் இந்திய எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து கைதானவர்கள். 2பேர் கள்ளக் கடத்தல் செய்து கைதானவர்கள். இந்த 24 கைதிகளையும் இந்திய அரசு நேற்றுமுன்தினம் விடுவித்து வாகா எல்லைச்சாவடி வழியாக பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்தது.

பாகிஸ்தான் நாட்டு பிராந்திய சிறைகளுக்கான மந்திரி சாகீத் அக்பர் நிவானி கைதிகள் 24 பேரையும் வரவேற்று அழைத்துச் சென்றார்.

விடுவிக்கப்பட்ட 24 கைதிகளும் பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 2ஆண்டு முதல் 15 ஆண்டுவரை கைதிகளாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## போலி பால் பவுடர் மீண்டும் பயங்கரம்!

சீனாவில், போலி பவுடர் கொடுமை மீண்டும் தலை தூக்கியுள்ளது.

சீனாவில் கலப்பட உணவுப்பொருட்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. போலி பால் பவுடர் சாட்பிட்ட 13 குழந்தைகள் கடந்தாண்டு பலியாயின. 200 குழ்ந்தைகள் பாதிக்கப்பட்டன. அவர்களின் உடல், கை, கால்கள் சிறுத்தன. தலை மட்டும பெரிதாக உள்ளன. போலி பால் பவுடரால் பாதித்த குழந்தைகள், 'பெரிய தலை குழந்தைகள்' என்று அழைக்கப்பட்டு வருகின்றன.

குழந்தைகள் பலியான விவகாரம் உலகளவில் கவனத்தை ஈர்த்தது. போலிகளை ஒழிக்க சீன அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. இதனால், போலிகளின் விற்பனை குறைந்தது. தற்போது, போலி பால் பவுடர் விவகாரம் மீணடும் தலை தூக்கியுள்ளது.

போலி பால் பவுடர் சாப்பிட்ட ஆறு மாத பெண் குழநதை, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஹனன் மாகாணத்தைச் சோந்த குய் யங்மிங் என்பவரின இக்குழந்தை, கடந்த ஒரு மாதமாக அழுது கொண்ட இருந்தது. மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோதுதான், போலி பால் பவுடர் விவகாரம் தெரிந்தது. இது தொடர்பாக, சீன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். (ற)

## உடைகிறது பஸ்வானின் லோக் ஜன சக்தி கட்சி!

### லாலுவுக்கு ஆதரவு வலுக்கிறது

பீகாரில் லோக் ஜனசக்தி கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது. கட்சி எம்.எல்.ஏக்கள் சிலர் பஸ்வானுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதனால், மாநிலத்தில் ஆட்சி அமைப்பதிலிருந்து வந்த முட்டுக்கட்டை நிலைமை முடிவுக்கு வரும் சூழ்நிலை உருவாகியுள்ளது.



பஸ்வான் லாலு

பீகாரில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டுள்ளது. இங்கு புதிய ஆட்சியை ஏற்படுத்தும் துருப்புசசீட்டு லோக் ஜனசக்தி கட்சியின் தலைவர் ராம் விலாஸ் பஸ்வான் கையில் உள்ளது. லாலுவின் ராஷ்டிரிய ஜனதா தளத்திற்கோ அல்லது பா.ஜ.கட்சிக்கோ ஆதரவு தரமுடியாது என்பதில் பஸ்வான் தொடர்ந்து பிடிவாதமாக உள்ளார். அவரின் இந்தப் பிடிவாதத்தால் அவரது கட்சி எம்.எல்.ஏக்கள் சிலர் அதிருப்தி அடைந்துள்ளனர். லோக் ஜனசக்தி கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ அஜய்குமார் புல்வான் கட்சித் தலைவர் பஸ்வானுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளார்.

இதற்கிடையில், பஸ்வான் கட்சியைச் சேர்ந்த பல்கானின் என்பவரும், வேறு சில எம்.எல்.ஏக்களும் கடந்த வியாழக்கிழமை இரவு ராஷ்டிரிய ஜனதா தளம் கட்சித் தலைவர் லாலு பிரசாத் யாதவை அவரின் வீட்டில் சந்தித்துப் பேசியுள்ளனர். அரசு அமைப்பது தொடர்பாக விவாதித்துள்ளனர் என பெயர் வெளியிட விரும்பாத லோக் ஜனசக்தி தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் பஸ்வானின் கட்சியில் உள்ள எம்.எல்.ஏக்கள் சிலர் அவருக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். லாலுவின் தந்திரத்தினால் லோக் ஜனசக்தி கட்சி உடையும் சூழ்நிலை ஏறபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ற)

## ஐக்கிய நாடுகள் சபையை மறுசீரமைப்பது அவசியம்

### கொண்டலிஸா ரைஸ் வலியுறுத்து

ஐக்கியநாடுகள் சபையினை மறுசீரமைப்பு செய்யவேண்டிய தேவை ஏறபட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலிஸா ரைஸ் தெரிவித்துள்ளார்.

முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்தும் இயங்கவேண்டுமாயின் அது மறுசீரமைக்கப்படவேண்டியது அவசியம் என கொண்டலிஸா ரைஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய சில விடயங்கள் தொடர்பாக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென, அனைவரும் புரிந்துகொண்டுள்ளதாகவும் அவர் அமெரிக்க செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியாக ஜோன் வோற்றன் முன்மொழியப்பட்டுள்ளார்.

'உணவுக்காக எண்ணெய்' என்ற திட்டம் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளைச் சுட்டிக்காட்டி கொண்டலிஸா ரைஸ் இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

## மாடிக் கட்டடம் இடிந்த விபத்து; பலியானோர் தொகை 61 ஆக உயர்வு

(டாக்டா)

வங்கதேசத்தில் ஒன்பது மாடிக்கட்டடம் தரைமட்டமான சம்பவத்தில் பலியானவர்களின எண்ணிக்கை 61 ஆக உயர்ந்துள்ளது.

வங்கதேசம், டாக்டா நகருக்கு அருகே ஒன்பது மாடிக்கட்டடத்தில் ஆடை தயாரிப்பு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வந்தது. கடந்த ஐந்து நாட்களுக்கு முன்பு கட்டடத்தில் இருந்த பாய்லர் திடீரென வெடித்ததில ஒன்பது மாடிக்கட்டடம் அடியோடு தரைமட்டமானது. கட்டடத்தின் உள்ளே பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் இடிபாடுகளுக்குள் சிக்கிக்கொண்டனர்.

பொலிஸாரும், தன்னார்வத் தொண்டு ஊழியர்களும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இடிபாடுகளில சிக்கியிருக்கும் உடல்களை மீட்டு அடையாளம் காணும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதுவரை 61 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஒருவர் கூறுகையில,

இடிபாடுகளிலிருந்து இதுவரை 100க்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளோம். காணாமல் போன 100 பேரின் நிலைமை என்ன என்று தெரியவில்லை. மீட்கப்படும உடல்கள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால், உடல்களை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார். (ற)

## சாதனை குதிரையின் நகல்

பிரெஞ்சு மறறும் இத்தாலி ஆராய்ச்சியாளர்கள் உலகின் 2ஆவது முறையாக குளோனிங் குதிரைய்ய உருவாக்கியுள்ளனர்.

பிரெஞ்சு மற்றும் இத்தாலி ஆராய்ச்சியாளர்கள் இணைந்து 2003ஆம் ஆண்டு குளோனிங் முறையில் உலகின் முதல் குதிரையைப் பிறக்கச் செய்தனர். பிரோமட்டி என்ற குதிரையின் நகலாக இதனை உருவாக்கி இருந்தனர்.

தற்போது உலகின் 2ஆவது முறையாக குளோனிங் குதிரையை இவர்கள் உருவாக்கியுள்ளார்கள். கடந்த 1994, 96ஆம் ஆண்டுகளில் ஓட்டப்பந்தயத்தில் 'அதிக சக்தி வாய்ந்த குதிரை' எனத் சாதனைபடைத்த 'பராஸ்' என்ற பெயருள்ள குதிரையின் நகலாக இக் குதிரை உருவாக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பீராஸுக்கு இனவிருத்தி செய்ய முடியாத வகையில் சிறப்பு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. எனவே, குளோனிங் முறையில் அதன் நகலை உருவாககி ஆராயசசியாளர்கள் சாதனை படைத்துள்ளனர். (ற)

# இலங்கை அரசியலில் விஜேவீர முதல் வீரவன்ஸ வரை

நேற்றைய தொடர்ச்சி...

இந்தச் சூழலிலேயே 2000ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலிலும் அதைவிட முக்கியமாக 2001ஆம் ஆண்டுத் தேர்தலிலும் ஜே.வி.பி.ஒரு சிங்கள பௌத்த அடையாளத்தைத் தனக்கு வழங்கிக்கொண்டது.

போர்மூலமே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற கொள்கையில், சிஹல உறுமய மட்டுமே யூ.என்.பியையும் ஸ்ரீ.சு.கட்சியையும்விட வித்தியாசமாக நின்றன. 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் ஜே.வி.பியை மேலும் பேரினவாதத்தின் திசையிலேயே தள்ளின. இதன் விளைவாக ஜே.வி.பியின் சிங்கள பௌத்த இனவெறியின் முகமான விமல் வீரவன்ஸ இன்று அக்கட்சியின் பிரதான பேச்சாளராக உள்ளார். இது தற்செயலானதல்ல. ஜே.வி.பி இந்த முகத்தையே நாட்டின் மக்களுக்குக் காட்ட விரும்புகிறது.

கடந்த மூன்றாண்டு காலமாக அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவிடாமல் தடுப்பதில் ஜே.வி.பி.முழுமூச்சாக உள்ளது. 2004இறுதியில் நடந்த சுனாமிப் பேரழிவின் பின்பு ஜே.வி.பி.தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குக் கூடத் தடைகளை விதிக்கிற நோக்கிலும் தமிழ் -முஸ்லிம் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கிலும் செயற்பட்டு இனக்குரோதத்தைக் கிளறிவிடுகிறது. ஜே.வி.பியின் முப்பத்தேழாண்டுக்கால வரலாறு நமக்குச் சொல்லுவது என்ன? மாக்ஸிய முகமூடியுடன் அரசியலைத் தொடங்கிய ஜே.வி.பியின் சீரழிவு தவிர்க்க இயலாது. அதன் தத்துவார்த்தப் பாதையில் கீழ் நோக்கிச் சென்றது. ஜே.வி.பியின் சீரழிவைத் தனிமனிதர்களது சீரழிவுடன் ஒப்பிட இயலாது. இது அமைப்பு அடிப்படையிலான ஒரு சீரழிவாகும். சமசமாஜக் கட்சியினதும் சோவியத் சார்பு திரிபுவாதிகளதும் சீரழிவு பாராளுமன்றச் சறுக்குப் பாதையில் அடிவைத்ததால் ஏற்பட்டது. அக்கட்சிகளின் கொள்கைகள் பேரினவாத அடிப்படையில் வகுக்கப்பட்டவையல்ல. ஆனால் அவர்கள் தேசிய முதலாளி வர்க்கத்துடன் செய்த சமரசங்கள் அவற்றைப் பேரினவாதத்தின் முன்பு மண்டியிடச் செய்தன. இன்று ஜே.வி.பியோ தனது இந்திய எதிர்ப்பை மட்டுமில்லாமல் அமெரிக்க எதிர்ப்பையும் கைவிட்டு விட்டது.

ஜே.வி.பியின் மனமாற்றம் வெறும் அதிகார வேட்கையால் ஏற்பட்ட ஒன்று மட்டுமே. ஒரு சிறு முதலாளியப் பேரினவாதக் கட்சியுடன் செய்கிற சமரசமாகவே ஜே.வி.பியின் அண்மைய கூட்டணி அமைந்தது. இதுபோல ஒரு கூட்டணிக்கான முயற்சி 1987இல் எடுக்கப்பட்டது. எனினும் ஜே.வி.பி.தனது கைஓங்குகிற நிலையில் இன்னொரு வலிய பங்காளியுடன் கூட்டுச்சேர விரும்பவில்லை.

ஜே.வி.பிக்கு மாக்ஸிய அடையாளமும் அங்கீகாரமும் வழங்கியது ஒரு ட்ரொட்சிய நாலாவது அகிலம் என்பதையும் இலங்கையில் முலாளியத்தையும் தேசியவாதிகளையும் தவிர்த்தால் ட்ரொட்ஸ்கியவாதிகளோ 1990களில் ஜே.வி.பிக்கு ஒரு முற்போக்கு முத்திரை குத்தினர். இதுவும் கவனத்துக்குரிய ஒரு விடயமாகும்.

ஜே.வி.பிக்கு இடதுசாரி அடையாளம் இடுவதை நேர்மையான மாக்ஸிய வாதிகள் முற்றாகவும் தொடர்ச்சியாகவும் விமர்சிப்பது மிகவும் அவசியம். அன்றேல் ஜே.வி.யைக் காட்டி நேர்மையான இடதுசாரிகளைத் தனிமைப்படுத்துவதில் பிற்போக்காளர்கள் வெற்றி பெறுவர்.

அடுத்த கேள்வி ஜே.வி.யின் அடிப்படை பற்றியது. ஜே.வி.பி.சிறு முதலாளியக்கட்சியாக இருந்து இப்போது பேரினவாத தேசிய முதலாளியக் கட்சியாக மாறுகிறதா என்ற கேள்வியும் கவனமாக ஆராயப்பட வேண்டும். □

**— நன்றி: புதிய பூமி —**

## 90 நாட்களுக்குள் வழக்குகளை விசாரித்து தீர்ப்புவழங்க நடவடிக்கை

(கொழும்பு)

மக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் பாரிய குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகளை 90 நாட்களுக்குள் விசாரித்து தீர்ப்பு வழங்க சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மேற்படியான பாரிய குற்றங்கள் காரணமாக கைதுசெய்யப்படும் சந்தேக நபர்களுக்கு எதிராக மஜிஸ்திரேட் நீதவான் நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்வதற்குப் பதிலாக நேரடியாக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வற்கு ஏதுவாக சட்டமா அதிபருக்கு அதிகாரம் வழங்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்படவிருக்கிறது. (க)

## இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்ட தூதுவர் நியமனத்தை ஏற்க கனடா மறுப்பு

இலங்கை அரசாங்கத்தால் புதிய தூதுவராக கனடா நாட்டிற்கு தெரிவுசெய்யப்பட்ட சந்திரானந்தா டி சில்வாவின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத் திடீர் முடிவை கடந்த வாரப்பகுதியில் கனேடிய அரசாங்கம் இலங்கை அரசிற்குத் தெரிவித்ததாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பாதுகாப்பமைச்சின் செயலாளராக சந்திரானந்த டி சில்வா பணியாற்றிய காரணத்தால் அக்கால கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர் என்ற குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படாது விட்டாலும் கூட கனேடிய குடிவரவு குடியகல்வுச் சட்டம் 2002 இன் பிரகாரம் கனடாவிற்குள் நுழைவதற்குத் தகுதியற்றவர் என கனேடிய அரசாங்கம் இலங்கை அரசிற்கு அறிவித்துள்ளது.

இலங்கையில் நிகழ்த்தப்பட்டுவரும் மனிதஉரிமை மீறல் சம்பவங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம் என வெளி உலகத்திற்குக் காட்ட முயன்று வரும் இலீங்கை அரசாங்கத்திற்கு நல்ல பாடம் ஒன்றை கனேடிய அரசாங்கம் புகட்டியுள்ளது.

சந்திரானந்தா டி சில்வா பாதுகாப்புச் செயலாளராகப் பதவியேற்றும் முன்னர் தேர்தல் ஆணையாளராகப் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனேடிய அரசியல் மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் ரொறொன்ரோ வாழ் தமிழர்கள்தான் கனேடிய அரசின் இம் முடிவிற்குக் காரணம் என கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள் விசனம் வெளியிட்டுள்ளன. (க-4,9)

## தமிழ் புதுவருட கிரிக்கெற் போட்டி

(சுண்டுக்குளி)

தமிழ் புதுவருட திருநாளை முன்னிட்டு சுண்டுக்குளி விளையாட்டுக் கழக அணிக்கும் புனித சாள்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற சினேகபூர்வ 20 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெற் போட்டியில் புனிதசாள்ஸ் அணி 13 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய புனிதசாள்ஸ் அணி 15.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் நியூட்டன் 20 ஓட்டங்களையும் சச்சி தவநேசன் 15 ஓட்டங்களையும் றட்சன் 10 ஓட்டங்களையும் தமது அணிக்கு பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் ரஜீவ் 3 விக்கெற்றுக்களையும் ஆதி 2 விக்கெற்றுக்களையும் சிறிகாந் ஒரு விக்கெற்றையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுண்டுக்குளி அணி 13.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 42 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதனால் தோல்வியுற்றது. சூட்டி 15ஓட்டங்களையும் ஜிம்மி 10 ஓட்டங்களையும் தமது அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் லெனின் 4 விக்கெற்றுக்களையும் ரவி 3 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சென்சாள்ஸ் பழைய மாணவர் சங்கத்தலைவர் நியூட்டனும் சிறப்பு விருந்தினராக விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் நிர்மலனும் கலந்து கொண்டனர். (7-110)

## கிழக்கு மாகாணத்தில் தொடரும் வன்முறைகளால் போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடையும் அபாயம்

(கொழும்பு)

**கிழக்குப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் வன்முறைகளால் போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடையும் அபா யம் நிலவுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

திருக்கோவில் பிரதேச செயலர் ஏ.கே.தவராஜா என்பவர் நேற்று முன்தினம் தனது மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளையில் 4 தடவைகள் சுடப்பட்டுள்ளார். திருக்கோவில் மட்டக்களப்பிற்கு தெற்காக உள்ள கிழக்கிலங்கையின் பிரதான ஒரு நகராகும்.

இதனால் இக் கொலையின் பின்னணியில் தமிழ் ஆயுதக் குழுவினரே உள்ளனர் என தாம் நம்புவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மார்ச் 2004ஆம் ஆண்டில் 6ஆயிரம் போராளிகளுடன் கருணா தரப்பினர் புலிகளிடமிருந்து பிரிந்து சென்றதன் பின்னர் பெருமளவான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். புலிகள் தம்மை தாக்குவதற்கு கருணாதரப்பினரை அரசாங்கம் பயன்படுத்துகிறது என குற்றஞ்சாட்டியிருந்தனர். இதனை அரசாங்கமும் மறுத்துவருகிறது. இதேசமயம் மேற்படி தவராஜாவின் படுகொலையை தமிழ்நெற் வெளியிட்டிருப்பினும் அது புலிகளால் மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றி எத்தகவலையும் வெளியிடவில்லை.

இத்தகைய வன்முறைகள் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கைக்கு பாரிய அச்சுறுத்தலாகும். 2003ஆம் ஆண்டு ஏப்ரலில் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டதும் போர்நிறுத்தத்தை தக்க வைத்துக்கொள்வதில் இன்றுவரை தோல்வியே ஏற்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இப்படுகொலையை கண்டித்துள்ள அரசாங்கம், இதற்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகளை குறிவைத்துள்ளதானது, போர் நிறுத்த உடன்படிக்கை கடுமையாக அமுல்செய்யப்படும் இடங்களிலும் அவசரமாக சுனாமி புனரமைப்பு வேலைகளும் நிவாரணப்பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வரும் இடங்களிலும் அரசாங்க அலுவல்களின் தொழிற்பாட்டை குலைப்பதற்கென விடுக்கப்பட்ட அச்சுறுத்தலேயாகும் என அரசாங்கத்தின் அறிக்கை கூறுகிறது.

அரசாங்கத்தின் மேற்படி பணிகளை மதிக்காதவர்களே இக்கொலைக்கு பின்னால் உள்ளனர் என்பது தெளிவு என்றும் அவ்வறிக்கை கூறுகிறது. கடந்த வெள்ளியன்று புலிகளுக்கும் கருணாதரப்பினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது.

கிழக்கிலங்கையில் அண்மையில் போர்நிறுத்த கண்காணிப்பாளர்கள் தமது மேலதிக தொண்டர்களை பணியில் அமர்த்தியும் கூட படுகொலைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளதையிட்டு ஐரோப்பிய அதிகாரி ஒருவர் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பில் கண்காணிப்புக்குழு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது என அதன் பேச்சாளர் ஹெலன் தெரிவித்தார். தமிழர்களுக்கு தனிநாடு கோரி 1984ஆம் ஆண்டில் புலிகள் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். அன்றிலிருந்து 2002ஆம் ஆண்டு யுத்தநிறுத்த ஒப்பந்தம் வரை 65 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றார். (க-6)

## தவறுதலாக இடம்பெறும் விபத்துக்களை தவறாகப் பயன்படுத்தும் இளைஞர்கள்

(கல்வியங்காடு)

எமது பிள்ளைகள் விபத்துக்குள்ளாகி படுமோசமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வேளையில், எந்தவகையிலும் பிரயோசனம் இல்லாத வேலையை இளைஞர்கள் செய்துள்ளார்கள் என இருபாலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விபத்துச் சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெற்றோர் கூறியதாக கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பஸ் எரிப்பு சம்பவமானது ஒரு இழிவான செயலாகும். விபத்து என்பது திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்டது அல்ல. பஸ்ஸையும், மோட்டார் சைக்கிளையும் தீக்கிரையாக்கியதன் விளைவாக இரண்டு வாகனத்தின் உரிமையாளர்களுக்கும் நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கவோ அல்லது வழக்குத் தொடரவோ முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் முன்யோசனையற்ற இச் செயல்களால் மேலும் பாதிப்புக்களே ஏற்படுகின்றன.

ஆகவே பொதுமக்கள் இனிவரும் காலங்களிலாவது பின்விளைவை சிந்தித்து காரியங்களைச் செய்யவேண்டும் என பணிவாகக் கேட்டுக்கொள்கின்றேன். இத்தகைய சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்குள்ளேயே சர்ச்சையை ஏற்படுத்தும் சூழ்நிலை உருவாகிவிடும் எனவும் ஸ்ரீசெல்வம் மேலும் தெரிவித்தார். (7-74)

# போப் தேர்தல் இன்று

## வத்திக்கான் நோக்கிய ஒரு பார்வை

புதிய பாப்பரசரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று திங்கட்கிழமை வத்திக்கானில் ஆரம்பமாகவுள்ளது. 265ஆவது பாப்பரசரைத் தெரிவு செய்யும் இன்றைய தேர்தலில் 115 கர்தினால்கள் வாக்களிக்கவுள்ளனர்.

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் தேர்தல் முறைமை, தேர்தல் இடம்பெறும் இடங்கள் மற்றும் பாராம்பரிய வழக்கங்கள் என்பவற்றை இதில் நோக்குவோம்.

### வரலாற்றில் முதல் முறை

புதிய போப்புக்கான தேர்தல் நடந்து முடிய சில நாட்கள் ஆகும். முன்பெல்லாம் தேர்தல் முடியும் வரை வாக்குப்பதிவு நடக்கும் சிஸ்டின் சேப்பலைவிட்டு கர்தினால்கள் வெளியில் வரமுடியாது.

ஆனால் அந்த வீதியில் தற்போது தளர்வு செய்யப் பட்டுள்ளது. இரவில் 'செயின்ட் மார்த்தா' எனும் அரண் மனை போன்ற ஓட்டலில் அவர்கள் தங்கிக்கொள்ள லாம். இந்த வசதி வரலாற்றில் முதல் முறையாக வழங் கப்படுகிறது. 5மாடிகள் கொண்ட இந்த ஓட்டலில் 131 பிரத்தியேக வசதிகள் கொண்ட அறைகள், 108 சொகுசு அறைகள் மற்றும் 23 தனி அறைகள் உள் ளன. 'செயின்ட் மார்த்தா' ஓட்ட லில் இருந்து தேர்தல் நடைபெறும் சிஸ்டின் சேப்பல் ஒரு கிலோமீற்றர் தூரம். இதற்கிடையில் மிக பாது காப்பாக கர்த்தினால்கள் சென்று வருவார்கள். வெளியில் யாருட னும் தொடர்பு கொள்ள மாட்டார் கள். குறிப்பாக பத்திரிகையாளர் களிடம் சிக்கமாட்டார்கள்.


கர்தினால்கள் தங்கும் அறை

### காலைப் பிரார்த்தனை

இன்று காலை பிரார்த்தனை நடக்கும். அப்போது தான் யாரை அடுத்த போப்பாக தேர்வு செய்வது என்ற எண்ணத்தை கர் தினால்கள் மனதுக்குள் கொண்டுவருவார்கள்

### ரகசியம் காக்கும் தொழில்நுட்பம்

வாக்களிக்கும் இடமான சிஸ்டின் சேப்பலுக்குள் நுழைந்தவுடன், கர்தினால்கள் அமைதியாக இருப்பார்கள். பைபிளை வைத்து ரகசியம் காக்க உறுதிமொழி எடுத்துக் கொள்வார்கள்.

வேட்பாளர்களாக முன்மொழிவதும் வழிமொழிவதும் வழக்கம் இல்லை. 115 கர்தினால்களும் தங்களுக்கு பிடித்தவரின் பெயரை எழுதிப் போடலாம்.

ரகசியம்:- சில பணியாட்கள் தவிர வெளியாட்கள் யாரையும் உள்ளே அனுமதிப்பதில்லை. வாக்களிப்பு தொடங்குமுன் உள்புறமாக தாழிட்டுக்கொள்வார்கள்.

1475இல் கட்டப்பட்ட சிஸ்டின் சேப்பலில் 1506முதல் 1512 வரையான காலத்தில் மைக்கலேஞ்சலோ ஓவியங் களை தீட்டியுள்ளார். இந்த சேப்பல், 135அடி நீளம், 44 அடி அகலமும் உடையது. 12 ஜன்னல்கள் உள்ளன. புனிதர் கள் மற்றும் தேவதைகளின் ஓவியங்கள் ஆடை இல்லாமல் வரையப்பட்டிருந்தாலும் அதில் ஆபாசம் இல்லை.

தேர்தலில் கர்தினால்கள் எழுதிய பெயர்களை வாக்கு எண்ணுபவர் சத்தம் போட்டு வாசிப்பார். இது பிற கர்தி னால்களுக்குக் கேட்கும். வெளியில் 400மீ. தூரத்திலிருந்து லேசர் மைக்ரோபோன் மூலம் இதை கேட்க வாய்ப்புள்ளது. எனவே அதைத் தடுக்க அகஸ்டிக்ஜாமர் கருவியும் அங்கு பொருத்தப்படும். இது வெளியே செல்லும்ஒலியை சிதறடித்து விடும். மொபைல் போன்ஜாமர் கருவியும் நிறுவப்படும்.

### வாக்கு சீட்டு எண்ணிக்கை

வாக்குகளை எண்ணுவதற்கு மூன்று கர்தினால்கள், அதை மீண்டும் சரிபார்க்க மூன்று கர்தினால் கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுடன் மூன்று கர்தினால்கள் நடக்க முடியாத கர்தினால்களிடம் வாக்குச் சீட்டுகளை வாங்கும் பணி உள் ளிட்ட உதவிப் பணிகளை மேற்கொள்வார்கள். வாக்கு எண்ணும் பணியில் உள்ள 9 பேரும் ஒவ்வொரு நாளும் மாற்றப்படுவார்கள்.


### யார் போப்?

கத்தோலிக்கர் யார் வேண்டுமானாலும் போப் ஆகத் தகுதி உடையவர்தான். அவர் கர்தினாலாகவோ அல்லது மதகுருவாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இதற்கு முன் கர்தினாலாக பதவி வகிக்காதவர்கள் போப் பாக தேர்வு செய்யப்பட்டிருக்கின்றனர். 1379 இல் தேர்வு செய்யப்பட்ட போப் நான்காம் அர்பனும் அவர்களில் ஒருவர்.

### கடந்த ஐந்து தேர்தல்கள்

| போப் | நாட்கள் | வாக்கெடுப்பு | திகதி |
|---|---|---|---|
| ஏழாம் பயஸ் | 1 | 3முறை | 1939மார்ச் 2 |
| 23ஆம் ஜான் | 3 | 11முறை | 1958அக் 28 |
| ஆறாம் பால் | 2 | 4முறை | 1963ஜுன் 21 |
| முதலாம் ஜான்பால் | 1 | 4முறை | 1978ஆக 26 |
| இரண்டாம் ஜான்பால் | 2 | 8முறை | 1978அக் 16 |

கடந்த பல நூற்றாண்டு காலமாக வாடிகனில் நடைபெறும் போப் தேர்தல் மரபுகளையும் கண்டிப் பான நடைமுறைகளையும் கொண்டது. 1996இல் போப் இரண்டாம் ஜான் பால் தேர்தல் முறைகளில் சில விஷயங்களை அமுல் செய்துள்ளார். அவை இந்த தேர்தலில் கடைப்பிடிக்கப்படுகின்றன.




வாக்குப்பதிவு தொடங்கும் முதல் நாளான இன்று தவிர்ந்த பிற நாட்களில் காலை இருமுறையும் (11.00 மற்றும் 12.30 மணி) மாலை இருமுறையும் (6.00 மற்றும் 7.30மணி) வாக்குப்பதிவு நடக்கும். ஒரு நாளில் இருமுறை மட்டுமே வாக்குச்சீட்டுகள் எரிக்கப்படும் (மதியம் 12.30 மற்றும் இரவு 7.30மணி).

### தேர்தலுக்குப் பின்

1816க்குப் பின்னர் எந்த தேர்த லும் நான்று நாட்களுக்கு மேல் நடந்தது இல்லை.

தான் எந்த பெயரால் அழைக் கப்பட வேண்டும் என்று விரும்பு கிறாரோ அந்த பெயர் அவரிடம் கேட்கப்படும்.

சிஸ்டின் சேப்பலில் உள்ள சிவப்பு அறைக்கு போப்பாக தேர்வு செய்யப்பட்ட கர்தினால் அழைத்துச் செல்லப்படுவார். அங்கு அவருக்கு போப்புக்குரிய உடைகள் அணிவிக் கப்படும்.

அங்கிருந்து உடனே பல்க னிக்கு போப் அழைத்து வரப்படு வார். அங்கு நமக்குப் போப் இருக்கிறார் என்று அறிமுகப் படுத் தப்படுவார். அப்போது போப் தனது முதல் ஆசியை வழங்குவார்.

### வாக்களிக்கும் 115 கர்தினால்கள்

உலகம் முழுவதும் 183 கர்தினால்கள் உள்ளனர். இதில் 117 பேர் வாக்களிக்க தகுதியுடையவர்கள் (பிலிப்பைன்ஸ் மற்றும் மெக்சிகோ நாடுகளை சேர்ந்த இரு கர்தினால்கள் உடல் நலக்குறைவால் வாக்கெடுப்பில் பங்கேற்கப் போவதில்லை). ஐரோப்பா-58, தென்அமெரிக்கா -21, வடஅமெரிக்கா-14, ஆபிரிக்கா-11, ஆசியா-11, ஆஸி-நியூசி-2, அமெரிக்கா-11.

போப் ஆறாம் பயசால் நியமிக்கப்பட்ட மூன்று கர்தினால்கள் தற்போதும் உள்ளனர் (முதலாம் ஜான்பாலுக்கு முன் பதவி வகித்தவர் ஆறாம் பயஸ்).

ஐரோப்பாவிலிருந்து இடம்பெறும் போப்புகள்தான் அதிகம். போப் இரண்டாம் ஜான்பாலின் இறுதி நிகழ்ச்சியில் உணர்ச்சி பொங்க உரையாற்றிய ஜெர்மனியை சேர்ந்த கர்தினால் ஜோசப் ரட்சிங்கர் தான் போப் ஆறாம் பயசால் நியமிக்கப்பட்ட ஒரே ஐரோப்பிய கர்தினால்.




### வாக்குப் பதிவு நடக்கும் சிஸ்டின் சேப்பல் உட்புறத் தோற்றம்


சிஸ்டின் சேப்பலுக்குள் ஒவ்வொரு கர்தினால்களுக்கும் தனி மேசை, நாற்காலி வழங்கப்படும். அவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்குச் சீட்டுகள் வழங்கப்படும்.

தான் விரும்பும் கர்தினால் பெயரை வாக்குச் சீட்டில் தெளிவாக எழுதி, அதை மறைக்கும் வண் ணம் வாக்குச்சீட்டை மடிக்கவேண்டும்.

கர்தினால்கள் தங்கள் இருக் கையிலிருந்து எழுந்து பலிபீடம் வரைசென்று வாக்குச்சீட்டை போடவேண்டும்.

பிரத்தியேக கோப்பையில் அவர்கள் வாக்குச்சீட்டை போட்டதும் மீண்டும் தங்கள் இருக்கைக்கே திரும்பவேண்டும்.

பலிபீடத்தின் முன் உள்ள மேசையில் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும். அவை அனைத்தும் ஊசி மூலம் நூலில் கோர்க்கப்பட்டு தனியே வைக்கப்படும்.





யாரும் தேர்வு செய்யப்படவில்லை என்றால் வாக்குச் சீட்டுகள் எரிக்கப்படும். கரும்புகையைப் பார்த்து யாரும் தேர்வு செய்யப்படவில்லை என்பதை தெரிந்து கொள்வார்கள்.


யாரும் மூன்றில் இருபங்கு வாக்குகள் பெறவில்லை என்றால், காலை இருமுறை மாலை இருமுறை என்று இரு நாட்களுக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும்.


இதில் யாராவது தேர்வு செய்யப்படாவிட்டால், வாக்கெடுப்பு ஒருநாள் இடைவெளி விட்டு தொடங்கும். மீண்டும் 7 வாக்கெடுப்பு நடைபெறும். இதிலும் தேர்வு செய்யப்படாவிட்டால் இந்த சுற்று இருமுறை தொடரும். அதன் பின்னர்தான் மெஜாரிட்டி எண்ணிக்கை (பாதி வாக்கு) முறையில் வாக்கெடுப்பு நடைபெறும். யாராவது பாதிக்கும் மேல் வாக்கு பெற்றிருப்பாரேயானால் அவர் போப் ஆக அறிவிக்கப்படுவார்.

### எலக்ட்ரோனிக் யுகத்திலும் மாறாத பாரம்பரியம்

வத்திகானில் பாரம்பரியத்தை காக்க எலக்ட்ரோனிக் தொழில்நுட்பம் பயன்படுகிறது. ஆனால் எலக்ட்ரோனிக் வளர்ச்சிக்காக பாரம்பரியத்தை விட்டுக்கொடுக்கவில்லை.


கர்தினால்கள் வாக்குப் போடும் பெட்டி இந்த கிண்ணங்கள் தான்.


வாக்குச்சீட்டு


வாக்குப் பதிவின் முடிவில் வாக்குச்சீட்டுகளை எரிக்க உதவும் அடுப்பு (எரித்து விடுவதால் மறு எண்ணிக்கைக்கோ பிரச்சினைகளுக்கோ வாய்ப்பு இல்லை).

# தியாக தீபம் அன்னை பூபதி

உலகுக்கு எடுத்துக்காட்டாக மண்ணின் விடிவுக்காகவும் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் அந்



நிய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராகப் போராடி உயிர்நீத்த மாபெரும் தியாகி அன்னை பூபதி.

அவர் தியாகி ஆகி 17 வருடங்கள் உருண்டோடி விட்டாலும் தமிழ் மக்களின் உள்ளங்களில் கலங்கரை விளக்காக இன்னமும் பிரகாசித்துத் கொண்டிருக்கின்றது, அவருடைய தியாகமானது சாதாரணமானதல்ல. ஒரு வரலாறாகவே அமைந்துள்ளது.

1988 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம் திகதி மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தில தனது உண்ணாநோன்பை ஆரம்பித்து சித்திரை மாதம் 19 ஆம் திகதி அனைவர் உள்ளங்களிலும் சோகததை ஏற்படுத்தி தன் உயிரை மண்ணுக்காகத் தியாகம் செய்தார் அன்னை பூபதி.

மடடக்களப்பு கிரானிலுள்ள அன்னமுத்து பெரியபிள்ளை தம்பதிக்கு மகளாக 1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3 ஆம் திகதி பிறந்தார். இவர் லட்சக்கணக்கான மக்களின் உள்ளங்களில் நிலைத்திருக்கும் அளவுக்கு பெருமையைத் தேடித் தருவார் என அவரது பெற்றோர் நினைத்திருக்கவில்லை.

12 ஆவது வயதில் திருமண வாழ்க்கையில் இணைந்து கொண்ட அவர், கணபதிப்பிள்ளை என்பவரை இல்லத்துணைவராக ஏற்றுக்கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினார். சிங்கள இனவெறி பிடித்த இராணுவத்தின் அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும் கட்டவிழ்க்கப்பட்ட நிலையில் இவருடைய குடும்பமும் அவற்றுக்கு தப்பவில்லை.

**தியாக தீபம் அன்னை பூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவு தினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

அன்னை பூபதியின் 28 வயதுடைய மகன் இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். அட்டூழியங்கள் அதிகரித்துக் கொண்டு செல்லுகின்ற நிலையில் கிரானில் இருந்து நாவற்கேணிப்பகுதிக்கு இடம்பெயர்ந்து வாழ்ந்து வந்தார்.

அங்கு இரண்டாவது கணவருக்கு பிறந்த மூத்தமகனும் இராணுவத்தால் கொலலப்பட்டாா. இன்னொரு மகன இராணுவத்தின் சுற்றிவளைப்பில் கைதுசெய்யப்பட்டு பூசா இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அன்னை பூபதி சோகம் நிறைந்து வேதனை தான் வாழ்க்கையென வாழ்ந்து கொண்டிருந்த வேளை இந்தியப்படை இலங்கை அரசின் ஒப்புதலுடன் தமிழ்ப் பிரதேசங்களில் கால் பதித்தது. இந்நிலையில தமிழருக்கு விடிவு கிடைக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளை இந்திய இராணுவத்தின் அடாவடித்தனம் எல்லை மீறியது.

ஆரம்பத்தில் மகிழ்ச்சியான ஒரு சூழ்நிலை காணப்பட்டாலும் போகப் போக அமைதிப்படை அட்டூழியப்படையாக மாறி தனது சுயரூபத்தைக் காட்டத் தொடங்கியது. நம்பியிருந்த மக்களை ஏமாற்றி நயவஞ்சகம் செய்ய ஆரம்பித்த வேளை இந்தியப் படையின் அட்டூழியங்களை எதிர்த்து அன்னையர் முன்னணி போராடத் தயாரானது.

இந்நிலையில் இந்தியப் படையின் செயற்பாடுகளை நிறுத்தக் கோரி திருமதி அன்னம்மா டேவிட், திருமதி நடேசம்மா வடிவேல் ஆகியோர் உண்ணாவிரதம் இருந்த வேளை அவர்களின்போராட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டதையடுத்து அன்னை பூபதி உறுதியான தீர்மானத்தின் அடிப்படையில் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பு இருக்க ஆயத்தமானார்.

இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்ய வேண்டும், இந்திய அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும் ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து 1988 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 19 ஆம் திகதி ஆரம்பித்த அன்னை பூபதியின் உண்ணா நோன்பினை நிறுத்தும் நடவடிக்கையில் இந்திய அரசு செயற்பட்டது ஆனால் அவர்களுடைய முயற்சி நிறைவுறாத நிலை

**நடேசிதரன் புங்குடுதீவு**

யில் அன்னை பூபதி தமிழரின் விடுதலைக்காய் தன்னைத் சித்திரை மாதம் 19 ஆம் திகதி தியாகம் செய்து கொண்டார்.

இவருடைய மரணத்தினால் இந்திய அரசினது முகமூடி கிழித்தெறியப்பட்டு இந்திய அரசின் அமைதிப்படையென வந்த இராணுவத்தின் அட்டூழியங்கள் வெளியுலகிக்கு வெளிப்படுத்தப்பட்டு அவர்களின் சுயரூபம் நிருபிக்கப்பட்டது. அவரின் தியாகம் எதிரிகளை சுட்டெரித்து எமது மண்ணில் இருந்து விரட்டியது. □

# மே தினம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மேதினத்தைச் சிறப்பாக முன்னெடுப்பதற்கான விசேட கலந்துரையாடல் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை விளக்குவதற்கான கூட்டமொன்று எதிர்வரும 20 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ்.கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, இக் கூட்டத்தில் அனைத்துத் தொழிற்சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள்,கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் உட்பட அனைத்து சங்கங்களினதும் தலைவர், செயலாளர்கள், இலங்கைத தமிழராசிரியர் சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேதின ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ந)

# தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தில் புறக்கணிப்பு

(சாவகச்சேரி)

தொண்டர் ஆசிரியர் நியமன விடயத்தில் அண்மையில் வெளியான பெயர்ப்பட்டியலில் தென் மராட்சி, வடமராட்சி கல்வி வலய தொண்டராசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்ட போது போரினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி வலய தொண்டர் ஆசிரியர் விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்த போதிலும் தமது விடயத்தில் அக்கறை செலுத்தப்படவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது வெளியான பெயர்ப் பட்டியலில் யாழ்.கல்வி வலயமும் கிளிநொச்சி போன்ற பிற மாவட்ட வலயங்களைச் சேர்ந்தோர் உள்வாங்கப்பட்ட போதிலும் தென்மராட்சி, வடமராட்சி வலயங்கள் உள்வாங்கப்படவில்லை எனவும் தென்மராட்சி வலயத்துக்குட்பட்ட 26 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நியாயமான தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும் என பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (7-21)

# நன்னடத்தையின் அடிப்படையில் கைதிகளை விடுவிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறைகளில் நன்னடத்தை அடிப்படையில் இனங்காணப்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டுவருவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் றூபி மர்சூத் தெரிவித்தார்.

நீதியமைச்சர் நியமித்த சபையின் ஊடாக அவர்களை விடுதலை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சபையின் தலைவராக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் செயற்படுகிறார். நூறு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளின் நன்னடத்தை உட்பட அவர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கைகள் குறிப்பிட்ட சிறைச்சாலை ஆணையாளர்களின் மூலம் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இந்த அறிக்கைகளுக்கு அமைய விடுதலை செய்ய வேண்டிய கைதிகள் தொடர்பான தீர்மானத்தை சபை எடுக்கும் எனவும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் நிலவும் இடநெருக்கடிகள் உட்பட பல்வேறு காரணஙகளைக் கவனத்தில் கொண்டு இந்தததீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-4-9)

# எண்ணெய் வள ஆய்வை நடத்த கேள்விப்பத்திரம் கோரப்படும்

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பில் கனிய எண்ணெய் வளம் இருப்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கு எண்ணெய் உற்பத்தித் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களிடம் விரைவில் கேள்விப்பத்திரம் கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் இலங்கை கனியவளம் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் ரைற்றர் குணவர்த்தன, மன்னார் கடற்பரப்பில் கனியவளம் இருப்பது தொடர்பில் நடத்தப்பட்ட அடிப்படைமட்ட ஆய்வுகள் முடிவடைந்துள்ளது.

அதன் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு குறிப்பிட்ட பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் மற்றும் வேறுபல சான்றுகள் அவுஸ்திரேலியாவின் போத் நகரில் அமைந்துள்ள ஆய்வுகூடமொன்றிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் யூன் மாதம் அளவில் அந்த அறிக்கைகள் கிடைத்தவுடன் கேள்வி மனுக்கள் கோரப்படும் என இலங்கை கனியவளம் தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார். (க-9)

# மோதல்களைத் தடுக்கும் அதிகாரம் எமக்கில்லை

## க.கா.குழு கைவிரிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அந்த அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா அணியினருக்குமிடையிலான மோதல்கள் அதிகரித்துச் செல்வதாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், யுத்த நிறுத்த உடன்பாட்டின் கீழ் இந்த மோதல்களைத் தடுப்பதற்கான அதிகாரங்களோ அல்லது அதற்கான வழிமுறைகளோ இல்லை.

யார் யார் என்னென்ன செய்தார்கள், எவ்வாறு செய்தார்கள், சம்பவங்கள் எப்படி இடம்பெற்றன என்ற விடயங்களை மட்டும் சொல்லமுடியும்.

குறைந்தது பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைக் கூட கண்காணிப்புக் குழுவினரால் மேற்கொள்ளமுடியாது என கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

# நாட்டின் வளர்ச்சிக்கு பிள்ளைச் செல்வமே அவசியம் என்கிறார் பிரிட்டிஷ் பேராசிரியர்

(அம்பாறை)

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு பணமோ தங்கமோ முக்கிய வளமல்ல, மாறாக பிள்ளைகளே உண்மையான வளங்களாகும்.

இவ்வாறு கல்முனை ஆதார வைத்தியசாலையில் பேசிய பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியரும் அம்டா நிறுவனத்தின் வேலைத்திட்டத் தலைவருமான பேராசிரியர் மைக்கேல் சீயர் தெரிவித்தார்.

உலக தரிசன நிறுவனம் ஒரு தொகுதி வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைத்த நிகழ்வு அண்மையில் வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம் தலைமையில் நடைபெற்றது,

அங்கு பேராசிரியர் சீயர் மேலும் பேசுகையில்,

கடின உழைப்புடன் சேர்ந்து ஒற்றுமையுடனும் செயற்பட்டால் இந் நாடடை மீண்டும் கட்டியெழுப்ப முடியும்.

இலங்கை வளமான நாடு. நாம் எமது சுனாமி வேலைத்திட்டங்களை மக்கள் மீது சுமத்துவதில்லை. மாறாக மக்களைத் தொடர்புபடுத்தி வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருகிறோம் என்றார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் எச்.எம்.ஹேரத் அபேதீர பேசுகையில்,

இன்றைய சூழலில் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் கூடுதலான உதவிகளை எமது மக்களுக்கு நல்கி வருகின்றன.

இழந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்ல பல திட்டங்களை வகுத்து செயற்படுகின்றன.

உலக தரிசன நிறுவனம் இந்த உதவிகளை செய்வதையிட்டு வாழ்த்துகிறேன் என்றார்.

இந்நிகழ்வின் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராம சேவையாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

வைத்திய சாலை அபிவிருத்திக்காக புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் உலக தரிசன நிறுவன சர்வதேச பணிப்பாளர் அன்ரூ லயனுடன் டாக்டர் முருகானந்தம் கைச்சாத்திட்டார். (க)

# ஆசிரியர் பயிற்சிக்கு விண்ணப்பிக்குக

(திருகோணமலை)

நாட்டிலுள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் இரு வருட ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளை பயில்வதற்குத் தகுதியான அரசாங்க மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் பட்டதாரி அல்லாத ஆசிரியர்களிடமிருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மகரகம தேசிய கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் தொலைக் கல்விப் பாடநெறி, பிறின்செற் ஆசிரிய பயிற்சி என்பவற்றைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்களும் நிறுவனரீதியான பயிற்சிக்கலாசாலை பயிற்சிக்கென விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறானவர்களுக்கு இறுதிச் சலுகை இதுவென்பதால் இம்முறை தவறாது விண்ணப்பிக்குமாறு கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

சிங்களம், ஆங்கிலம், ஆரம்பக் கலவி, சமயம், விசேட கல்வி உட்பட 20 துறைகளுக்கு ஆசிரியர்கள் பயிற்சிக்காக அனுமதிக்கப்படவுள்ளனர்.

வயதுக்கட்டுப்பாடு எதுவுமின்றி பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் சித்தியடைபவர்கள் இலங்கை ஆசிரிய சேவையின் தரம் 03 வகுப்பு 01 இல் நியமனம் பெறுவர்.

யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபருக்கும் வன்னி மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகள் வவுனியா தேசியக் கல்லூரி பீடாதிபதிக்கும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபருக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

ஆங்கிலத்தில் பயிற்சி பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை இசுருபாயவில் உள்ள கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக் கிளைக்கு அனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் யாவும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படவேண்டும். (க)

# சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க பொதுக்கட்டமைப்பு அத்திபாரமிடுகின்றது

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி



(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணப் பணியை மேற்கொள்வதற்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை அமைத்தால் அது தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க அத்திபாரமாக இருக்கும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரபட்சமற்ற முறையில நிவாரணங்களை வழங்குவதற்கும், அவர்களை சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவதற்கும் பொதுக் கட்டமைப்பு கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும். இந்த பொதுக்கட்டமைப்பின் மூலம் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்தச் சந்தர்ப்பததைப பயனபடுத்தி அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் சமாதானப் பேசசுவாத்தையை ஆரம்பிக்கவேண்டும் என்றார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதுகுறித்து கருத்துத் தொிவிக்கையில்,

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்துவதன் மூலம் தேங்கிக்கிடக்கும் சமாதான நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்க முடியும் என்றார்.

சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டால் சுனாமியால் பாதிப்புற்ற மக்களும் விரைவில் இயல்புவாழ்க்கைக்குத் திரும்பமுடியும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீவுகாண முடியும். அதுமட்டுமன்றி நாட்டையும் அபவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்லலாம் எனத் தெரிவித்தார். (க-9)

# அமீர்அலி, நஜீப் ஏ, மஜீத் மு. காங்கிரஸிலிருந்து நீக்கம்

## பாராளுமன்றச் செயலருக்கு அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களான எம்.எஸ்.அமீர் அலி, நஜீப் ஏ, மஜீத் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருநது நீக்கப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

எம்மை எம்.பி பதவியிலிருந்து நீக்குவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முடிவு செய்துள்ளோம்.

இந்த விடயமாகச் சட்டத்துறை நிபுணர்களுடன் கலந்துரையாடி வருகிறோம் என்று அமைச்சர் அமீர் அலி குறிப்பிட்டார்.

நாம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள். எம்மைக் கட்சியிலிருந்து எப்படி வெளியேற்ற முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

நான் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரோ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரோ இல்லை.

அப்படி இருக்கும்போது என்னை எம்.பி பதவியிலிருந்து எப்படி இவர்களால் வெளியேற்ற முடியும்? இது பெரியதொரு அநீதி இதனை அடிப்படையாக வைத்தே மனுவைத தாகல் செய்யவுள்ளேன் என்றார். (க-9)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(மானிப்பாய்)

வலிதெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மாதகல் உப அலுவலகப் பிரிவில் 9 இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி.தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

ஆதலால் அத்தினங்களில் வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் அந்தந்த இடங்களில் இத்தடுப்பூசியை போடுமாறு வலிதெற்கு மேற்கு பிரதேச சபை திட்டமிடல் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

மாதகல் உப அலுவலக பொறுப்பதிகாரியினால் வளர்ப்பு நாய்களுக்கான குடும்ப அட்டைகளும் வழஙகப்படும். ஊசி போடப்படும் தினஙகளும் இடங்களும் வருமாறு:

இன்று காலை 9-10 மணிவரை இளவாலை கிராம சேவையாளர் அலுவலகத்திலும், 10.30 -12 மணிவரை இளவாலை பெரியவிளான் புனித அந்தோனியார் சனசமூக நிலையத்திலும், 1-2.30 மணிவரை இளவாலை புனித அன்னம்மன் சனசமூக நிலையத்திலும், நாளை காலை 9-10 மணிவரை போயிட்டி லூர்து அன்னை சனசமூக நிலையத்திலும், 10.30-12மணிவரை இளவாலை புனித யூதாதேயு சனசமூக நிலையத்திலும் 1-2.30 மணிவரை மாரீசன் கூடல் புனித கயித்தார் சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்படும்.

அதேபோல எதிர்வரும் 20ஆம் திகதி காலை 9-10.30வரை மாதகல் பிள்ளையார் கோவிலடி இளைஞர் மன்ற சனசமூக நிலையத்திலும், 10.30-12 மணிவரை மாதகல் புக்கைப் புலோ காந்திஜி சனசமூக நிலையத்திலும் 1-2.30 மாதகல் சகாயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் தடுப்பூசி போடப்படும். (7)

# 108 பவுண் நகை களவு

அராலி மேற்கு வட்டுக்கோட்டையில் கடந்த 13ஆம் திகதி பெனடிக் பத்மகுமாரன் என்பவருடைய வீட்டில் 108 பவுண் நகை களவாடப் பட்டுள்ளது.

இதன் பெறுமதி சுமார் 10 லட்சத்து 80ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

களவு இடம்பெற்ற தினம் கணவன், மனைவியும் காலை 5மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தமது புடவையகத்திற்கு சென்று இரவு 9.00மணிககு வந்து பார்த்தபோது நகைகள் களவு போயிருந்தமை தெரியவந்துள்ளது. திருடர்கள் கூரை ஓட்டைப் பிரித்து இறங்கி திருடியதாகத் தெரிவிக்கப் படுகிறது. (த-39)

# அரச ஊழியர்களுக்கு மருத்துவக் காப்புறுதி

(கொழும்பு)

விரைவில் அமுல்செய்யப்படவிருக்கும் மருத்துவ காப்புறுதித் திட்டத்திலிருந்து 7 இலட்சம் பேருக்கும் அதிகமான அரசாங்க ஊழியர்கள் நன்மையடையவுள்ளனர்.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா வரையிலான காப்புறுதிக் காப்பீட்டுக்குத் தகுதிபெறுவர்.

இந்தத்திட்டத்தின் கீழ் இருதய சத்திர சிகிச்சை மற்றும் முக்கிய சத்திரச் சிகிச்சைகளுக்கென அரசாங்க ஊழியர் ஒருவர் மேலும் மூன்று இலட்சத்து 50ஆயிரம் ரூபாவை பெற்றுககொள்வார் என்று அமைச்சின செயலாளர் டி.எஸ்.திஸநாயக்க தெரிவித்தார்.

பெண் ஊழியர்கள் மகப்பேற்றுக்கென விசேட நிதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். மூக்குக்கண்ணாடி கொள்வனவு செய்வதற்கென மூவாயிரத்து 500 ரூபா ஒரு ஊழியருக்குப் படியாக வழங்கப்படும்.

அரசாங்க ஊழியர் ஒருவர் மரணமடைந்தால் அவருக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் இந்தக் காப்புறுதித்திட்டத்தின் கீழ் திருப்பிச் செலுத்தப்படும். சகல அரசாங்க ஊழியர்களும் கட்டாயமாக இந்தத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

இந்தத் திட்டத்தைப் பேணுவதற்காக ஒவ்வொரு ஊழியரினதும் மாதாந்த சம்பளத்திலிருந்து 75 ரூபா கழிக்கப் படும். இதேவேளை, ஒவ்வொரு ஊழியரின் சார்பிலும் அரசாங்கம் 69 ரூபாவை மாதாந்தம் இந்தத் திட்டத்துக்காகச் செலுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# பதவி வெற்றிடம்

(சாவகச்சேரி)

அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள பதிவாளர் நாயக திணைக்களத்தின் பதிவாளர் சேவை தரம் III பதவி வெற்றிடத்திற்கு பட்டதாரிகளிடமிருநது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

22தொடக்கம் 45 வயதிற்கிடைப்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். அரச கூட்டுத்தாபன சேவையிலுள்ளோருக்கு வயதுக் கட்டுப்பாடு இல்லை.

பிரதேச செயலகங்களில் 5 வருட பதில் மேலதிக மாவட்ட பதிவாளர்களாக செயலாற்றியோரும் காணி மாவட்ட பதிவகத்தில் 2 வருட பொது எழுதுநராக சேவை யாற்றியோரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயக அலுவலகம், இல.280 பிரதான வீதி, கொழும்பு 11 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். (7-21)

# விஷேட நீதிமன்றமொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விஷேட நீதிமன்றம் ஒன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

சொலிஸிற்றல் ஜெனரல் சி.ஆர்.டி சில்வாவின் தலைமையிலான சட்ட நிபுணர்குழு இந்தத் திட்டத்தை அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்துள்ளது.

சந்தேக நபர்களாக இனங்காணப் பட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை இந்த விசேட நீதிமன்றம் துரிதப்படுத்தும. அதேவேளை திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களுக்கான தண்டனைகளை உடனுக்குடன் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென சட்ட நிபுணர்கள் பரிந்துரை செய்துள்ளனர். (ற-4)

# பெற்றோர்களை இழந்த சிறுவருக்கு சேமிப்புக் கணக்கு

பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குவைபபு கிளிநொச்சியிலுள்ள சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியில் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டுள்ளது.

இலண்டனில் வாழ்ந்துவரும் உறவுகளில் ஒருவரான பிரபாகரன் தனக்கு ஒரு குழந்தை கிடைத்ததை முன்னிட்டே இந்தச் சேமிப்புக் கணக்கை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சிறுவர் நலத்திட்டப் பணிப்பாளர் இரவியின் வழிகாட்டுதலுடன் தொடங்கியுள்ளார்.

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் போர்ச்சூழல் காரணமாகவும் இயற்கை பாதிப்புகள் காரணமாகவும் பெற்றோர்களை இழந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிர்வாக அனுசரணையின் கீழ் பராமரிக்கப் பட்டுவரும் சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களுள் ஒருவருக்கு தலா பத்தாயிரம் ரூபா தொகைப்படி தனது குழந்தை உட்பட 51 சிறுவர்களுக்கு இந்தச் சேமிப்புக் கணக்கு வைப்பினை பிரபாகரன் தொடங்கியுள்ளார்.

முற்பகல் 11.00 மணியளவில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி மேலாளர் சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் இந்த வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டது. இந்தச் சேமிப்புக் கணக்கு வைப்பு நிகழ்வில் குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்களும் கலந்து கொண்டு தங்களது சேமிப்புக் கணக்குப் புத்தகங்களைப் பெற்றுச் சென்றனர். (ற)

# புதிய நிர்வாகசபை

(பொன்னாலை)

சித்தன்கேணி - இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக ஆ.கோணேஸ்வரனும், செயலாளராக ஆ.பாலகணேஷும் பொருளாளராக ச.அரவிந்தனும் தெரிவாகியுளளனர். மேலும் 11 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (7-49)

# ஆலயச் சூழலில் மீன் வியாபாரம்

(பொன்னாலை)

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அண்மையிலுள்ள இந்து ஆலயம் ஒன்றுக்கு அண்மையில் சிலர் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக ஆலய அறங்காவலர்களும் அப்பகுதி மக்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆனைக்கோட்டை - கரைப்பிரான் வநாயகர் ஆலய அலங்கார வளவுக்கு கீழ் வைத்தே மீன வியாபாரம் இடம பெற்று வருகின்றது.

மாலை நேரத்தில் நடந்து வரும் இம் மீன்வியாபாரம் தொடர்பாக ஆலய பரிபாலனசபையினரும, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் மானிப்பாய் பிரதேச சபைக்கு முறையிட்டிருந்தனர். எனினும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. (7-49)

# யானை அமர்ந்தும் உயிர் தப்பிய அதிசயம்

(திருவனந்தபுரம்)

ஒருவர் மீது யானை ஏறி அமர்ந்தும் அவர் எவ்வித காயங்களுமின்றி உயிர் பிழைத்த சம்பவமொன்று அண்மையில் கேரளாவில் நடந்தது.

கேரளா மாநிலம் எடத்துண என்னுமிடத்தைச் சேர்ந்த ஜோஸ் எனற விவசாயியின் மகனுக்கு துபாயில் வேலை கிடைத்துள்ளது. அவரை விமான நிலையத்தில் விடுவதற்காக ஜோஸ் காரில் சென்றுள்ளார். மகனை விமான நிலையத்தில் விட்டுத் திரும்ப நள்ளிரவாகிவிட்டது.

அந்த நள்ளிரவு நேரத்தில் ஜோஸ் காரில் திரும்பிக்கொண்டிருந்த போது யானையொன்று காரின் குறுக்கே வந்துளளது. யானை குறுக்கே வந்ததை அவர் கவனியாததால் யானை மீது கார் மோதியுள்ளது. மோதிய வேகத்தில் அவர் காரின் முன்பகுதியில் கவிழ்ந்துள்ளார்.

அவர் எழும்புவதற்கு முயற்சித்தபோது சர்க்கஸ் யானை நாற்காலியில் அமர்வது போல யானை காரின் முன் பகுதியில் அமர்ந்திருந்தது. முதுகில் ஏதோ ஒரு பாரம் அழுத்துவதை உணர்ந்தார். உடன் அந்தப் பாரம் விலகவும் செய்தது.

அவர் அமர்ந்திருக்க முயன்ற போது பெட்டிக்குள் அடைபட்டது போல அசையமுடியாத நிலை. யானை அமர்நதிருந்ததால் கார் நசுங்கி அவர் காரினுள் சிக்கியிருந்தார். ஊர்மக்கள் வந்து கார்க் கதவை உடைத்து அவரை வெளியே எடுத்தனர். இச்சம்பவத்தில் அவர் இரு பற்களை மாத்திரமே இழந்திருந்தார். (து)

# கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

தென்புலோலியூர் மூச்சம்புலம் சிவன் ஆலய நூதன சந்திரசேகர மூர்த்தி பிரதிஷ்டா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வல்வை வைத்தீஸ்வரர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ எஸ்.பரமேஸ்வர மனோகரக் குருக்கள் கும்பாபிஷேகத்தை நடாத்துவார். (7-52)


## விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக், ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதானவிலையில் பெற்றுக்கொள்ள

### நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

T.P: 222 3226

# பார்த்திப வருட பொதுப் பலன்கள்

## கடகம்



இளகிய மனமும் மனதில் கற்பனைத் திறனும் அதிகம் கொண்ட உங்களுக்கு இப் பார்த்திப வருடம் தொடக்கமே அனுகூலமற்று இருக்கும். உங்களுக்கு ஏழரைச்சனியில் 26.05.2005முதல் ஜென்ம சனி தொடங்க உள்ளதும் பொன்னவன் எனப் போற்றப்படும் குரு பகவான் உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் 28.09.2005 முடியவும் அதன் பிறகு 4ஆம் வீட்டில் சஞ்சரிப்பதும் அனுகூலமற்ற அமைப்பாகும். ஏழரைச்சனி நடைபெறுவதால் பொருளாதார ரீதியாக நெருக்கடிகள் அதிகரிக்கும். சிலர் கடன்வாங்க நேரிடும். வண்டி வாகனங்கள் மூலம் வீண் செலவு, பயணங்களால் அனுகூலமற்ற பலன்கள் என சொல்லமுடியாத பல துயரங்கள் ஏற்படும். சிலருக்கு உடல் ஆரோக்கிய ரீதியாக பாதிப்பும் நெருங்கியவர்களை இழக்கக்கூடிய சூழ்நிலைகளும் உண்டாகும். தொழில் உத்தியோக ரீதியாக மறைமுக எதிர்ப்புகளும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் எச்சரிக்கையாக செயல்படுவது மிகவும் உத்தமம். சர்ப்பகிரமான கேது 3ஆம் வீட்டிலும் ராகு பகவான் 9ஆம் வீட்டிலும் சஞ்சாரம் செய்ய உள்ளனர். இது அனுகூலமான அமைப்பு என்றாலும் குரு சனி சஞ்சாரம் சாதகமற்று சஞ்சரிப்பதால் பெரிய அளவில் நற்பலன் ஏற்பட வாய்ப்பில்லை. இப்புத்தாண்டில் பொதுவாக பார்த்தால் உங்களுக்கு சோதனை நிறைந்த ஆண்டாக இருக்கும்.

**உடல் நிலை:** நீங்கள் இக்காலம் முழுவதும் உடல் நலனில் தீவிரமாக அக்கறை எடுக்க வேண்டும். அடிக்கடி ஜலத்தொடர்பானவைகளால் பாதிப்பினை அடைவீர்கள். மனைவி மற்றும் குழந்தைகளின் உடல் நலனிலும் கூட சோர்வும் அடிக்கடி மருத்துவச் செலவுகளை அதிகமாகவே எதிர்கொள்ள நேரிடும். வெளியு,ர்ப் பயணங்களால் அதிக உடல் சோர்வும் அலைச்சலும் உண்டாகும்.

**குடும்பம் குழந்தை:** குடும்பத்தில் குழப்பமான நிலை உண்டாகும். எடுக்கும் எந்த ஒரு செயலிலும் மந்தமான நிலை அமையும். பொருளாதார நிலையில் சாதகமற்ற பலன்களையும் நெருக்கடிகளால் கடனசுமை அதிகரிக்கும். பிள்ளைகளால் மன சஞ்சலம் கூடும். உற்றார் உறவினர்களே விரோதியாக செயல்பட்டு திருமண சுபகாரிய முயற்சிகளைத் தடைசெய்வார்கள். குடும்பம் நடத்தவே மிகுந்த சிரமம் ஏற்படுத்தும்.

**உத்தியோக நிலை:** உத்தியோகஸ்தர்களுக்கு மேல் அதிகாரிகளுடன் ஒத்துப்போக முடியாத சூழ்நிலையினால் உடனடியாக புதிய இடமாற்றம் உண்டாகும். சிலருக்கு விருப்ப ஓய்வினைப் பெறும் அளவிற்கு மனதில் குழப்பமான நிலைகள் உருவாகும். புதிய வேலை அமைய தடைதாமதம்

பிக்கொள்வீர்கள். எது எப்படி இருந்தாலும் உங்கள் கடமை படிப்பது தான் என எண்ணி கடினமான முயற்சியினை மேற்கொள்ளுங்கள்.

**கலைஞர்களுக்கு:** கலைத்துறையில் உங்களது திறமைகளை முழுமையாக வெளிப்படுத்த முடியாதபடி பலவித இடையு,றுகளையும் போட்டிகளையும் எதிர்கொள்ளும்படி நேரிடும். பெரிய மனிதர்களிடம் மரியாதையாக நடந்துகொள்வது உங்கள் ஏற்றத்தை ஏற்படுத்தும்.

### 14.04.2005முதல் 25.05.2005வரை

உங்களுக்கு இக்காலம் ஏழரைச் சனிக்காலமாக இருப்பதால் உங்களுக்கு பலவகையிலும் சிக்கல்கள் உண்டாகும். மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். உடல் நலனில் ஜலத் தொடர்பானவைகளால் அடிக்கடி பாதிப்புகள் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினைகள் ஏற்படலாம். புத்திரர்களால் மன அமைதி குறையும். வீண் பிரச்சினைகளில் தலையிடுவது கூடாது. உற்றார் உறவினர்களும் விரோதம் பாராட்டுவார்கள். பொருளாதார நிலை நெருக்கடிகளை ஏற்படுத்தும். கணவன் மனைவியிடையே சண்டை சச்சரவுகள் உருவாகும். திருமண சுபமுயற்சி தடைப்படும். எடுக்கும் காரியம் அலைச்சலை ஏற்படுத்தும். கடன்களால் மன அமைதி குறையும். தொழில் வியாபார நிலையில் போட்டி பொறாமைகள் அதிகரிக்கும். முதலீடுகளை செய்யக்கூடாது. உத்தியோக ரீதியாக திடீர் இடமாற்றம் உண்டாகி அலைய நேரிடும். மாணவர்களுக்கு கல்வி ஆர்வம் குறையும். விவசாயிகளுக்கு விளைச்சலில் பாதிப்பு ஏற்படும்.

### 26.05.2005முதல் 27.09.2005வரை

ஜென்ம சனி நடைபெறுவதில் 3இல் குருபகவான சஞ்சரிப்பதும் உங்களது முயற்சிகளுக்கு தடைகளை ஏற்படுத்தும் அமைப்பாகும். தொடர்ந்து சோதனைகளையே சந்திப்பீர்கள். மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாயும். உடல் நலமும் சரியாக அமையாது. சிலருக்கு அறுவை சிகிச்சைகூட செய்யும்படி நேரிடும். மனைவி பிள்ளைகளும் சோர்வாகவே அமைவார்கள். குடும்பத்தில் பொருளாதார நிலையில் பலவிதமான சிக்கல்களும் கடன் சுமை அதிகரிக்கும் சூழ்நிலைகளும் உண்டாகும். எது எடுத்தாலும் அது தடையாகவே முடியும். அசையாச் சொத்து இழக்கவும் நேரிடும். கொடுக்கல் வாங்கல் சிக்கலை ஏற்படுத்தும். கணவன் மனைவ' கலகலப்பு இருக்காது. திருமண காரியம் தடைப்படும். தொழில் வியாபாரம் ஏஜன்ஸி கூட்டுத்தொழ'லில் நலிவை சந்திக்க நேரிடும். மாணவர்களுக்கு கல்வியில் தடைகள் ஏற்படுத்தும். அரசியலில் பதவிக்கு சில ஆபத்துக்களை எதிர்கொள்வீர்கள்.

### 28.09.2005முதல் 22.11.2005வரை

ஜென்ம சனி நடைபெறுவதும் 4இல் குரு இருப்பதும் மிகவும் சோதனை தரும் அமைப்பாகும்.

கடின முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

### 06.03.2006 முதல்13.04.2006வரை

உங்களுக்கு இக்காலத்தில் குரு சனி வக்கிரம் பெற்றிருப்பதால் உங்கள் வாழ்வில் இனிமையான தென்றல் வீசி உங்கள் சோதனைகளையும் வேதனைகளையும் விலக்கிவிடும். உடல் நலம் தேறி பலமும் வலிமையும் பெறுவீர்கள். மனைவியின் கர்ப்பக் கோளாறுகள் விலகி புத்திரபாக்கியம் அமையப் பெறும். கணவன் மனைவி உறவில் பு,சல்கள் விலகி ஒற்றுமை உண்டாகும். பிரிந்தவர்கள் கூடுவார்கள். உற்றார், உறவினர்கள், நண்பர்களின் உதவியும் ஆதரவும் தக்க சமயத்திற்கு உதவும். திருமண சுபகாரியம் உடனடியாகக் கைகூடி தடபுடலாக நடைபெற்று மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். பொருளாதார நிலையில் மிகவும் சிறப்பான பண வரவுகளும் சேமிப்பும் வீடு மனை வண்டி வாகனமும் அமையும். தொழில் வியாபாரநிலை மிகவும் சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்தும். கூட்டுத் தொழலில் நல்ல கூட்டாளிகள் அமைவார்கள். உத்தியோக ரீதியாக பதவி, ஊதிய உயர்வுகள் புதிய வேலை வாய்ப்புகளும் அமையும். மாணவர்கள் வெற்றிமேல் வெற்றி பெறுவார்கள்.

### நட்சத்திர பலன்கள்

### புனர்பு,சம் 4-ம் பாதம்

உங்களுக்கு சோதனைகளும் வேதனைகளுமே மாறி மாறி வரும். மனதை ஒரு நிலையில் வைத்திட முடியாதபடி குழப்பவாதியாக காட்சியளிப்பீர்கள். எதை எப்படி முடிப்பது என்று எண்ணி ஒரு செயலை பல தடவை செய்யும்படியாக நேரிடும். உடல்நலமும் பாதிக்கும். அதிக வீண் செலவுகளும் கடன்களால் சிலர் அவமானப்பட வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் மந்தமாக செயல்படும் நிலை, போட்டி பொறாமைகளையும் எதிர்கொள்ளவும் நேரிடும். கொடுக்கல் வாங்கலில் அதிக கவனமுடன் செயல்பட வேண்டும்.

### பு,சம்

வீண் செலவுகளையும் உடல்நலக் குறைவாலும் மனதில் வெறுப்பே மிஞ்சும் உடல்நலமும் பாதிக்கும் மருத்துவ செலவுகள் புத்திரர் மனைவி வழியிலும் ஏற்படும். கணவன் மனைவி உறவில் சிக்கல்கள் நிலவும. திருமண சுபகாரியம் தடைப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்களிடம் தேவையற்ற விரோத மனப்பான்மை உண்டாகும். பொருளாதாரநிலை சரியாக அமையாமல் கடன் தொல்லைகள் அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு கூடுதலாக உழைக்க நேரிடும. மாணவர்கள் வீண்பொழுதாகக் கழிப்பார்களே தவிர படிப்பில் ஆர்வமுடன் ஈடுபட மாட்டார்கள். தொழில் வியாபாரம் கூட்டுத்தொழில் ஏஜென்ஸி போன்வற்றில் கடுமையான சோதனைகளை எதிர்கொள்ளும்படியாக நேரிடும் எச்சரிக்கை தேவை.

### ஆயிலியம்

இக்காலத்தில் உங்களுக்கு பிரதான கிரகங்

யாக சூழ்நிலையினால் உடனடியாக புதிய இடமாற்றம் உண்டாகும். சிலருக்கு விருப்ப ஓய்வினைப் பெறும் அளவிற்கு மனதில் குழப்பமான நிலைகள் உருவாகும். புதிய வேலை அமைய தடைதாமதம் உண்டாகும். வெளிநாட்டுப் பணிக்காக செயல்படுவோர்களுக்கு சிலரால் ஏமாற்றப்படவும் வாய்ப்புள்ளதால் கவனம்தேவை.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபாரத்தில் மிகவும் மந்தமான நிலையும் மறைமுக எதிரிகளின் தொல்லையும் அமைவதால் தொழிலில் கவனம் செல்லாது. பொருள் தேக்கமும் உற்பத்திப் பாதிப்பும் கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளுக்குள் பிரிவையும் கூட சந்திக்க நேரிடும். ஏஜன்ஸி கண்ராக்ட் போன்றவற்றில் அதிகக் கவனமுடன் செயல்படுவது உத்தமம்.

**பெண்களுக்கு:** கவலைகளாலும் சோதனைகளாலும் நோய்வாய்ப்பட்டவர்போல சோர்வுடன் இருப்பீர்கள். கணவன் மனைவி இடையே அதிக கருத்து வேறுபாடுகள் உண்டாகும். திருமண சுப முயற்சிகள் தற்போது தடைப்படும். வேலைசெய்யும் பெண்களுக்கு அதிகாரிகளால் அதிக மன உளைச்சல் வேலைப்பளுவும் கூடும்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** அரசியலில் பதவிக்கு சில ஆபத்துக்களை உடன் இருப்பவர்களே உண்டாக்குவார்கள். பேச்சை வெகுவாகக் குறைத்துக்கொள்ளாவிட்டால் பலருக்கும் பதில் சொல்லவோ வம்பு வழக்குகளில் சிக்கிக் கொள்ளவோ சூழ்நிலைகள் உண்டாகும்.

**விவசாயிகளுக்கு:** உங்களின் விவசாயப் பணிகளில் பெரிய அளவில் செலவு செய்வதை குறைப்பது உத்தமம். அதிகமான காற்று காரணமாகவும் பயிர்களில் சேதம் உண்டாகலாம். விளை பொருட்கள் தரமற்றதாக அமைவதினால் சந்தையில் குறைவான விலை போகக்கூடிய வாய்ப்புகளும் உருவாகி விடும்.

**மாணவ மாணவியருக்கு:** கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் சரியான ஆர்வம் காட்ட முடியாதபடி கஷ்டங்களை மனதில் போட்டு குழப்

## 28.09.2005முதல் 22.11.2005வரை

ஜென்ம சனி நடைபெறுவதும் 4இல் குரு இருப்பதும் மிகவும் சோதனை தரும் அமைப்பாகும். கொடுக்கல் வாங்கலில் தேவையில்லாத சிக்கல்களில் சிக்கிக்கொள்வீர்கள். நண்பர்களே உங்களை ஏமாற்றுவார்கள். பெரிய தொகைகளையும் தவித்துவிட வேண்டும். தொழில் வியாபாரத்தில் பலமான போட்டிகளுடன் லாபமும் குறையும். வேலையாட்களும் கூட வீண் பிரச்சினை செய்வார்கள். கூட்டுத்தொழிலில் சிலருக்கு பிரிவை சந்திக்க நேரிடும். எதிலும் மிகவும் கவனம் தேவை. உடல் நலமும் மன அமைதியும் பாதிக்கும். உத்தியோக ரீதியாக உடன் பணியாளர்களின் கலகத்தினால் அதிகாரிகளின் கெடுபிடிக்கு ஆளாக நேரிடும். புதிய வேலையும் தற்போது சோதனையாக அமையாது. கணவன் மனைவி இடையே திருப்தியற்ற உறவு நிலை காணப்படும். திருமண சுப முயற்சிகளுக்கு சில இடையூறுகள் உண்டாகும். மாணவர்களன் மதிப்பெண் குறையும். விவசாயம் கடன்களால் பாதிக்கும்.

## 23.11.2005முதல் 05.03.2006வரை

ஜென்ம சனி நடைபெறுவதாலும் 4ஆம் வீட்டில் குரு சஞ்சரிப்பதாலும உங்கள் துன்பங்கள் தொடர்கதையாகவே இவ்வாண்டில் அமைந்துவிட்டது. நீங்கள் எதைச்செய்வதாக இருந்தாலும் ஒரு முறைக்கு பலமுறை சிந்தித்து செயல்பட வேண்டிய காலமாகும். உடல் நலனில் பாதிப்பும் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும் சூழ்நிலையும் புத்திரர்களால மன உளைச்சலும் அதிகரிக்கும். கணவன் மனைவி இடையே வீண் வாக்குவாதம் உணடாகும். குடும்பத்தில் மற்ற உறுப்பினர்களை அனுசரித்துப் போவது உத்தமம். தொழில் வியாபார நிலையில் வளர்ச்சி தடைப்படும். நவீன தொழில்நுட்பக்கருவிகள் எதிர்பாராமல் பழுது அடையும். அரசாங்கம் மூலமாக திடீர் சோதனைகள் உண்டாகும். அரசியலில் உடன இருப்பவர்களே துரோகம் செய்ய துணிவார்கள். உத்தியோக ரீதியாக அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகமுடியாத நிலை உருவாகும். மாணவர்கள்

தேவை.

## ஆயிலியம்

இக்காலத்தில் உங்களுக்கு பிரதான கிரகங்கள் சாதகமற்று உள்ளதால் நீங்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய காலமாகும். தொழில் வியாபார நிலையில் மறைமுக எதிர்ப்புகள் மேலோங்கும். உங்களின் முதலீட்டுக்கு ஏற்ற லாபம் அடைய முடியாத நிலையினால் விரக்தி அடைவீர்கள். குடும்பத்தில் உள்ள பொருட்களை விற்கவோ அடமானம் வைக்கவோ நேரிடும். வண்டி வாகனம் மூலம் அனுகூலமற்ற பலனை அடைவீர்கள். சுபகாரியங்கள் தடைப்படும். பெண்களுக்கு வயிற்றுக் கோளாறு, மாதவிடாய், கர்ப்பக் கோளாறுகளும் ஏற்படும். மாணவ மாணவியரின் மனம் அலைபாயும். இக்காலத்தில் எந்த ஒரு புதிய முயற்சிகளையும் எடுக்காமல் தவிர்ப்பது உத்தமம். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கைநழுவிப் போகும.

## அதிர்ஷ்ட குறிப்புகள்

அதிர்ஷ்ட தேதிகள்: 1, 2, 3, 9
கிழமை: திங்கள்
நிறம் : வெண்மை
தெய்வம்: வெங்கடாஜலபதி
திசை : வடகிழக்கு
கல் : முத்து

**பரிகாரம்:** உங்கள் ராசிக்கு ஏழரைச்சனியில் விரையச் சனி 26.05.2005 முடியவும், அதன் பிறகு ஜென்ம சனியும் தொடர்வதால் சனிக்கிழமை விரதம் மேற்கொண்டு சனி மந்திரம், சனி காயத்திரியை 9முறை கூறி வருவதும் ஆஞ்சநேயருக்கு துளசி மாலை, வடை மாலை, வெற்றிலை மாலை சாற்றி வழிபடுவதாலும் சோதனைகள் குறையும். 28.09.2005முடிய குரு பகவான் 3லும் அதன்பிறகும் 4லும் சஞ்சரிப்பதால் தொடர்ந்து வியாழக்கிழமைகளில் குரு தட்சணாமூர்த்தியை வணங்கி வழிபாடு செய்து ஏழை, பிராமணர்களுக்கு தங்களால் இயன்ற உதவியை செய்து வாருங்கள். (தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# குழந்தைகள்

ஒரு தந்தை தன்னுடைய மகனைப்பார்த்து "இதோ பார்... நீ எப்போதும் உன்னை விடபுத்திசாலியான பிள்ளைகளுடன் தான் சிநேகிதம் வைத்துக் கொள்ள வேணடும். அது தான் நல்லது" என்றார். உடனே அந்தப் பையன் "நீங்கள் கூறுவது சரிதான். ஆனால் என்னை விடமோசமான சிறுவர்களுக்கு ஒரு புத்திசாலி பையன் தேவையல்லவா? அது தான் அந்தப் பையனாக நான் இருக்கிறேன்" என்றார்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால் இந்தக் காலத்தில் சிறுவர்களிடம் வாயைக் கொடுத்தால் மீள்வது கஸ்டம் சிறுபிள்ளைகளிடம் உள்ள இந்த புத்திசாலித் தனத்தை பெற்றவர்கள் தூண்டி விடவேண்டும்.

இளேடிஷ் கார்ட்னர் என்று அமெரிக்காவில் ஒருவர் இருந்தார். குழந்தை உளவியல் நிபுணர். இவர் என்ன சொல்கிறார் என்றால் குழந்தைகள் எதிர்த்துப் பேசுவதை ஓரளவுக்கு அனுமதிப்பது தான் நல்லது என்கிறார். உங்கள் குழந்தை உங்களை எதிர்த்து ஏதாவது சொன்னால் உடனே நீங்கள் "முளைத்து மூன்று இலை விடவில்லை அதற்குள் உனக்கு இவ்வளவு திமிரா?" என்று கேட்கக் கூடாது.

சிறுவயதிலேயே பெரியவர்களை எதிர்த்துப் பேச விட்டுவிட்டால் பின்னால் அந்தக் குழந்தை கெட்டுப் போய் விடும் என்று நினைப்பது தவறு தந்தைக்குத் தெரியாத ஒரு கணக்கை ஒரு மகன் சரியாகச் செய்து விடுவான் உடனே அந்த தந்தை அது தனக்கு அவமரனம் என்று நினைக்கக்கூடாது அதை விடப் பெரிய அவமானம் எல்லாம் தாங்கிக்கொள்பவருக்கு மகன் செய்ததுதான் பெரிதாகப் போய் விட்டதா? நமது மகன நம்மை விடப்புத்திசாலியாக இருக்கிறானே என்று நினைத்துப் பெருமைப்படவேண்டும்.

பிள்ளை ஏதாவது உங்களிடம் கூற விரும்பினால் அதைக் கொஞ்சம் பொறுமையாகக்கேட்கவேண்டும் பிள்ளை தான் செய்த ஒருகாரியத்திற்கு அல்லது செய்யப்போகும் ஒரு காரியத்திற்கு என்ன காரணம் சொலகின்றான் என்பதைப் பரிவோடு கேட்கவேண்டும் சிறுபிள்ளை ஏதோ விளையாட்டுத் தனமாகப் பேசுகிறது என்று நினைத்துக்கொண்டு வேறு எங்கோ கவனம் செலுத்தக்கூடாது.

ஒரு சிறுவன் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கிறான் அவனது தாயார் அவனைக்கூப்பிட்டார். "தம்பி! இங்கேவா... கடைக்குப்போய் கொஞ்சம் தேயிலை வாங்கி வா" என்றார் சிறுவன் விளையாட்டில் ஏதோ ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறான் "கொஞ்சம் இருங்கள் அம்மா! இன்னும் கொஞ்ச நேரம் கழித்துப் போய் விட்டு வருகிறேன்" என்கிறான் இந்த நேரத்தில் தாய்விட்டுக் கொடுக்கவேண்டும் கோபப்படக் கூடாது. 'டேய் இப்போது கடைக்குப் போய்த்தான் ஆகவேண்டும். வருகிறாயா இல்லையா?' என்று வற்புறுத்த ஆரம்பித்தால் அந்தக் குழந்தைக்கு ஏமாற்றம், கோபம், வெறுப்பு எல்லாம் வந்து விடும். இது நல்லதில்லை.

அதனால் குழந்தைகளுக்கு நியாயமான பேச்சுரிமையை கொடுக்கவேண்டியது அவசியம் என்று குழந்தை உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர் பிள்ளைகள் ஏதாவது சந்தேகம் கேட்டால் அதற்குப் பதில் தெரியவில்லை என்பதற்காக அப்பாமார் கோபப்படக்கூடாது தந்தையரால் பதில் கூற முடியாத விடயங்கள் எவ்வளவோ இந்த உலகில் உள்ளன.

ஒரு பையன் அவர்களது அப்பாவைப் பார்த்துக் கேட்டான "அப்பா! ஒரு கல்லை கையிலிருந்து போட்டால் அது ஏன் தரையில் விழுகிறது?" என்றான் 'புவி யீர்ப்பு சக்திதான். அதற்குக்காரணம் கீழே இருக்கும் அந்த சக்திகல்லை இழுக்கிறது' என்றார் அப்பா. "இந்த சக்தி" ஏன் மேலே இழுக்கக்கூடாது? ஏன் கீழே இழுக்கிறது? என்றான் மகன் அப்பா பார்த்தார் "அவசரமாக கொஞ்சம் வேலை இருக்கிறது பின்பு வந்து பதில் கூறுகிறேன்" என்று சொல்லி விட்டு மெதுவாக நழுவிட்டார். பிள்ளைகளுக்குள்ளே பிரத்யேகமாக சில சந்தேகங்கள் வரும் அவற்றைச் சமளிப்பது சிரமம் தான் ஒரு வாத்தியார் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது வேடிக்கையாகக் கூறினார் "மாணவர்களே! இந்த உலகம் ஒரு நாள் அழியப்போகிறது எரிமலை குமுறப் போகிறது! வாகனம் இடிந்து விழப்போகிறது" என்று வரிசையாகக் கூறிக்கொண்டே போனார்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு மாணவன் பொறுமையாக எழுந்து "சார் அன்று பள்ளிக்கூடம் இருக்குமா சார்?" என்று கேட்டானாம்.

அவனது சந்தேகம் அவனுக்கு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசின் பேரினவாத போக்கை கண்டித்து தீவகத்தில் வியாழனன்று மாபெரும் பேரணி

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகார‌த்தை வழங்காமல் இழுத்தடிப்பு செய்து வருவது, கிழக்கில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் விடுதலைப்புலிப் போராளிகள் மீதான படுகொலைகள்,உள் உணவு நிவாரண வெட்டு, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கூட்டமைப்பை ஏற்படுத்தலில் இழுத்தடிப்பு, மீளக்குடியமர்ந்த மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியாமல் இராணுவ நெருக்கடிகள தொடர்வது, சுதந்திரமான கடற்றொழிலுக்கு கடற்படைகள் இடையூறு போன்ற விடயங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் கடைப்பிடித்து வரும் பேரினவாதப் போக்கை கண்டித்து தீவகத்தில் எதிர் வரும் வியாழக்கிழமை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

தீவகக் கோட்டபொது அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும்,தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம் என்பனவற்றின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட கண்டனப்பேரணி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடாத்தப்படவுள்ளது.

இப்பேரணி வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்பாக இருந்து ஆரம்பமாகிக் தீவுப்பகுதி தெற்கு (வேலணை) பிரதேச செயலர் பணிமனைக்கு சென்றடைந்து அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் கையளிக்கப்படும் என தீவகக் கோட்டப பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளைப் புறந்தள்ளி வரும் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களைக் கண்டித்து நடாத்தப்படும் இந்த மாபெரும் கண்டனப பேரணியில் அனைத்து தொழிலாளர்களையும், நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், அனைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்களையும் தவறாது கலந்து கொண்டு தத்தமது நிலைப்பாட்டை சர்வதேச சமுகத்திற்கு தெரியப்படுத்துமாறு தீவக கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது. (ரு-4)

## தாயகம் திரும்பியோருக்கு பாவனைப் பொருட்கள்

(பொன்னாலை)

இந்தியாவிலிருந்து விமானம் மூலம் அண்மையில் தாயகம் திரும்பி நெடுந்தீவுப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கு பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தால் இப் பாவனைப பொருட்கள் நெடுந்தீவு உதவ அரச அதிபர் பணி

# நிவாரணப் பணியை கண்காணிக்க ஐ.நா.அதிகாரிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு சர்வதேச நிதி நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதியுதவிகள் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை கண்காணிப்பு செய்யும் நட வடிக்கையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (யு.என்.டி.பி.)மிகுந்த அக்கறை கொண்டுள்ளது.

இந்தியா,தாய்லாந்து ஆகிய நாடுகள் சுனாமி நிவாரண நிதியைப் பெறாத நிலையில் இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளே பெருமளவு சுனாமி நிவாரண நிதியைப் பெற்றுள்ளன.

இந்நிதி சரியான வகையில் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைந்ததா என்பதை கண்காணிக்கவும் உறுதிசெய்யவும் யு.என்.டி.பி. அதிகாரிகள் விரைவில் இலங்கை வரவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

எண்ணெய்க்கு பதிலாக உணவு வழங்கும் திட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழலில் ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனானின் புதல்வரும சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருவதால் சுனாமி நிவாரண விவகாரத்திலும் ஏதேனும் ஊழல்கள் நடைபெற்று விடக்கூடாது என்பதில் ஐ.நா. மிகுந்த கவனம் செலுத்தி வருவது குறிப்பிடததக்கது. (க)

## கனடா பழைய மாணவர் 4 இலட்சம் நிதியுதவி

(பருத்தித்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண நடவடிக்கைகளுக்கென தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கனடாக்கிளை 4 இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

இந்நிதி கையளிப்பு வைபவம் புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ். கதிர்காமநாதன் சுனாமி நிவாரண புனரமைப்புச் செயலணிப்பொறுப்பாளர் எஸ்.பாலையாவிடம் அதற்கான காசோலையைக் கையளித்தார்.

இவ்வைபத்தில் விடுதலைப் புலிகளிடம் வடமராட்சி அரசியல்த்துறைப் பொறுப்பாளர் எஸ். இன்பன் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (7-52)

## கிறிஸ்டீனா றொக்கா நாளை இலங்கை வருகை

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் கிறிஸ்டீனா ரொக்கா இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு நாளை செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு வரவுள்ளார்.

அவர் தனது விஜயத்தின் போது சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமெரிக்க அரசின் உதவியுடன மேற்கொள்ளப்பட்டுவரும் நிவராண வேலைத் திட்டங்களைப் பார்வையிடவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

இலங்கை வரும் அவர் அமெரிக்காவின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிடுவதற்காக அன்றைய தினமே அங்கு பயணம் செய்யவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளரின் இலங்கைக்கான நான்காவது விஜயம் இதுவாகும்.

இதேவேளை, தனது இலங்கை விஜயத்தின் போது நோாவேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல் ஹெய்மையும் இவர் சந்தித்துப்பேசுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பேச்சுவார்த்தை இலங்கையின் சுனாமி பொதுக் கட்டமைப்பு விடயத்திலும், தடைப்பட்டுப் போயுள்ள சமாதான விடயத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ரு-4)

## உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தேர்தல் மாத இறுதியில்

(கொழும்பு)

இலங்கை உழைக்கும் பத்திரிகையாள்ர் சங்கத்தின 2005 ஆம் ஆண்டுக்கான தேர்தல் எதிர் வரும் 30 ஆம் திகதி கொழும்பு கோட்டை பிரிஸ் டல் வீதியிலுள்ள சோனக இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத்தேர்தலில் சங்கத்தின் 33 நிர்வாகக் குழு உறுப்பி னர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.89 பேர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். (க-9)

## சுனாமி பேரலையால் பாதிப்புற்ற பாடசாலைகளை மீள நிர்மாணிக்க தொண்டு நிறுவனங்கள் முன் வருகை

(திருகோணமலை)

ஆழிப்பேரலையால் முற்றாகப் பாதிக்கப்பட்ட 182 பாடசாலைகளை மீள நிர்மாணிப்பதற்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

182 பாடசாலைகளில் 98 பாடசாலைகள் புதிய இடத்தில் அமைய விருக்கின்றன.

84பாடசாலைகள் அதே இடத்தில் மீள அமைய விருக்கின்றன. இவற்றிற்கு 10 பில்லியன் ரூபா தேவைப் படுகிறது இதனைவிட அகதிமுகாம்கள் இருந்த 210 பாடசாலைகளை புனரமைக்கவும் தொண்டர் நிறுவனங் கள் முனவந்துள்ளன.

புதிய இடத்தில் அமையவுள்ள 98 பாடசாலை களுக்கு காணிப்பிரச்சினை தலையாய பிரச்சினையாகவிருப்பதாகக் கூறப்படுகிறது. (க)

## அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சிக்க ஜே.வி.பிக்கு எவ்வித அருகதையுமில்லை

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களை விமர்சிப்பதற்கு ஜே.வி.பியினருக்கோ அவர்களுடன் இணைந்த ஏனைய அமைப்பாளாகளுக்கோ எந்தவித அருகதையும் இல்லையென ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

சுனாமி நிவாரணங்களை விநியோகிக்கும் போது தமது கட்சியின் பெயரைப் பரப்பும் வகையில் பட்டிகளை ஒட்டிக்கொண்டு ஜே.வி.பியினர் விநியோகிக்கும் பொருட்கள் அனைத்தும் அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டவையாகும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரச சார்பற்ற நிறுவனங்களே முன்னின்றன என்பது அவர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்.

அன்று அவர்களின் உதவிகளைப் பெற்றவர்கள் இன்று அவர்களை விமர்சிக்கின்றார்கள் என கபர்காசிம் சாடினார்.(க-9)

# மீள்பார்வை



## பிரியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 41



*செயலாளர் நாயகத்தின் கடமைகள்*

9. 1) பாராளுமன்றத்தினதும் முழுப்பாராளுமன்றக் குழுக்களினதும் நடவடிக்கைகளைச் செயலாளர் நாயகம் அறிக்கைப்படுத்தி வைப்பதுடன் அத்தகைய பிரதியொன்றை இயலுமானால் பாராளுமன்றக் கூட்டத்திற்கு அடுத்த தினமே உறுப்பினரிடையே சுற்றிப் பரப்ப வேண்டும். சமுகமளித்த உறுப்பினரின் பெயர்களும் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட எல்லா முடிவுகளும் இவ்வறிக்கையில் பதிவாகியிருத்தல் வேண்டும்.

2)பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவிலோ வாக்கெடுப்புகள் நிகழும் சந்தர்ப்பங்களில் பிரேரணைக்குச் சார்பாகவும் எதிராகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிகையும் 42 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் வாக்கெடுப்பு நிகழ்ந்தால் அவ்வாறு வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெயர்களும் வாக்கெடுப்பினின்றும் ஒதுங்கி நிற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பெயர்களும் அறிக்கையில் இடம் பெறல்வேண்டும்.

3) கூட்ட அறிக்கை உறுதிப்படுத்தப்படத் தேவையில்லை. ஆனால் அறிக்கையில் பிழைகளிருப்பின் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பிரேரிக்கப்படும் பிரேரணை மூலம் அவை திருத்தப்படலாம்.

4) நாளுக்கு நாள் செயலாளர் நாயகம் ஒழுங்குப் புத்தகமொன்றினைத் தயாரித்து பாராளுமன்றச் சபாபீடத்திலும் நூல் நிலையத்திலும் வைத்தல் வேண்டும். இவ்வொழுங்குப் புத்தகத்தில் எதிர்வரும் எந்தவொரு தினத்திற்குமென நியமிக்கப்பட்ட எல்லா அலுவல்களும் குறித்த அல்லது ஓர் எதிர்வரும் தினத்திற்கென ஒத்திவைக்கப்பட்ட வினாக்களின் அல்லது பிரேரணைகளின் முன்னறிவித்தல்களும் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

5) குறிப்பிட்ட ஒரு தினத்திற்கென அலுவல் ஒதுக்கப்படலாம். அவ்வாறு ஒழுங்குப் புத்தகத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

6) பாராளுமன்றத்தின் முன் இடப்பட்ட கூட்ட அறிக்கைகள், பதிவேடுகள், சட்டமூலங்கள் ஏனைய ஆவணங்கள் அனைத்தினதும் பாதுகாப்பிற்கும் செயலாளர் நாயகம் பொறுப்பாவார். சபாநாயகர் அனுமதிக்கும் ஒழுங்கு வசதிகளின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரும் மற்றையோரும் இவற்றைப் பரிசீலனை செய்வதற்கு வசதியளித்தல் வேண்டும்.

*கூட்ட நடப்பெண்*

10. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியமைப்பின் 73 ஆம் உறுப்பிரையின்படி பாராளுமன்றத்தின் கூட்ட நடப்பெண் தலைமை வகிப்பவர் உட்பட இருபது உறுப்பினர்களாகும். எந்நேரத்திலாவது கூட்ட நடப்பெண் இல்லை என்பது சபாநாயகரினதோ அல்லது தலைமை வகிப்பவரினதோ கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அவர் வாக்கழைப்பு மணி அடிக்கக் கட்டளையிடுவார். ஐந்து நிமிடங்களின் முடிவில் கூட்ட நடப்பெண் காணப்படாத பட்சத்தில் அவர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

11. முழுப் பாராளுமன்றக் குழுவிற்குரிய கூட்டநடப்பெண் இருபதாகும். முழுப் பாராளுமன்றக் குழுவில் கூட்ட நடப்பெண் இல்லையென்பது அவதானிக்கப்பட்டால் தவிசாளர் இதன் முன்னுள்ள கட்டளையில் விதிக்கப் பட்டுள்ளபடி நடவடிக்கை மேற்கொள்வார். கூட்ட நடப்பெண் காணப்படாதவிடத்து அவர் அக்கிராசனத்தை விட்டகன்று பாராளுமன்றம் மீண்டும் கூடியதும் உடனடியாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணப்படுவர். அப்பொழுதும் கூட்ட நடப்பெண் இல்லாதிருப்பின் இதன் முன்னுள்ள கட்டளையில் விதிக்கப்பட்டுள்ளபடி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படுதல் வேண்டும். ஆனால் கூட்டநடப்பெண் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் பாராளுமன்றம் உடனே குழுநிலைக்கு மாறும்.

*பாராளுமன்ற நடவடிக்கைகள்*

பாராளுமன்ற அலுவல்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் உரையெதுவும் உரையாற்றப்படும் மொழியிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) பதிவு செய்யப்படும். அத்தகைய மொழியினை அறியாத உறுப்பினர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தல் சபாநாயகரின் கடமையாகும்.

அவ் வேறுபாடுகளில் அடங்கவேண்டியன.

1) ஒழுங்குப்பத்திரம் சிங்களத்திலும், தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படுதல்.

2) உரைகளையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் மற்றைய இரு மொழிகளிலும் சமகாலத்தில் உரைபெயர்த்தல்.

3) பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையின் முகப்புப் பக்க சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்படுதல்.

4) உரைகள் அவை நிகழ்த்தப்படும் மொழிகளிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) பதிவுசெய்யப்படுவதுடன், உரை நிகழ்த்துபவரின் பெயர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் பதிவு செய்யப்படுதல்.

*ஒத்திவைப்பு*

13. முன்னறிவித்தலின் பின் பிரேரிக்கப்படும் பிரேரணையொன்றின் மூலம் வேறொரு குறிப்பிட்ட தினத்திற்குப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும்படி பாராளுமன்றம் கட்டளையிட்டாலொழிய பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பு என்பது அடுத்துவரும் சாதாரண அமர்வு தினம் வரை எனப்பொருள்படும். காலவரையறையின்றி ஒத்திவைக்கக் கோரும் பிரேரணை அனுமதிக்கப்படமாட்டாது.

14. நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஓர் ஒத்திவைப்புக் காலத்தில் பிரதம அமைச்சர் வேண்டினால் அவ் வேண்டுதலில் குறிப்பிடப்பட்டதும் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட தினத்திற்கு முன்னதுமான ஒரு தினத்தில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு சபாநாயகர் அறிவித்தல் விடுப்பார். அதனையடுத்து சபாநாயகரின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதினத்திலும் நேரத்திலும் பாராளுமன்றம் கூடி முறைப்படி அந்தத் தினமும் நேரமும் வரையுமே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதுபோல் கருதி அன்றைய அலுவல்களைக் கவனிக்கும் சபாநாயகர் இத்தகைய ஓர் அறிவித்தலை விடுக்கும்பொழுது பாராளுமன்றம் கூட்டப்படும் தினத்தையும் நேரத்தையும் உறுப்பினர்க்கு அறியத் தருவதற்கான நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

*தடங்கற் பிரேரணைகள்*

15. ஒரு விவாதத்தையோ ஒரு விவாதத்தின் பொழுது பாராளுமன்றத்தையோ ஒத்திவைக்குமாறு அல்லது முழுப்பாராளுமன்றக் குழுநிலையிலாயின் குழுநிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றித் தவிசாளர் அறிவிக்க வேண்டுமென்றோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்றோ ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டால் அது பற்றிய விவாதம் அத்தகைய பிரேரணையுடன் தொடர்புள்ள விடயத்திற்குட்பட்டதாகவே இருத்தல் வேண்டும். ஒரு விவாதத்தின்போது அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரித்த அல்லது வழிமொழிந்த உறுப்பினரொருவர் மீண்டும் ஒருமுறை அதே விவாதத்தில் அத்தகைய பிரேரணையொன்றைப் பிரேரிக்கவோ வழிமொழியவோ அருகதையற்றவராவார்.

16. ஒரு விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அவ்விவாதத்தினை அல்லது பாராளுமன்றத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றோ அல்லது முழுப்பாராளுமன்றக் குழுநிலையிலாயின் குழுநிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றித் தவிசாளர் அறிவிக்கவேண்டுமென்றோ அல்லது அவர் அக்கிராசனத்தை விட்டகல வேண்டுமென்றோ பிரேரிக்கப்பட்ட பிரேரணையொன்று பாராளுமன்றத்தின் விதிகளைத் துர்ப்பிரயோகம் செய்வதாயுள்ளது என்று சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் வேறு உறுப்பினர் அல்லது முழுப்பாராளுமன்றக் குழுத் தவிசாளர் கருதுமிடத்து அவர் உடனடியாகவே அக்கிராசனத்திலிருந்து அப் பிரேரணையை பாராளுமன்றத்திற்கு விடலாம். அல்லது அப்பிரேரணையை பாராளுமன்றத்திற்கு எடுத்தியம்பாமல் இருக்கலாம்.

*அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தையொட்டி ஒத்திவைப்பு*

1)பொது அலுவல் எடுத்துக்கொள்ளப்படும்வரை (அமைச்சரவை அமைச்சரொருவராலன்றி) பாராளுமன்ற ஒத்திவைப்பிற்கான பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கமுடியாது. ஆனால் கேள்விகளின் இறுதியில் உறுப்பினரொருவர் தமது இருக்கையிலிருந்து எழுந்துநின்று திட்டவட்டமான அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றினை எடுத்துரைத்து அவ்வலுவலை விவாதிப்பதற்காக பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் பிரேரணையைப் பிரேரிக்க அனுமதி கேட்கும் பட்சத்தில் பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணை பிரேரிக்கலாம். (தொடரும்)

# செய்தித் துளிகள்

## உள்ளூராட்சிதேர்தல் ஒத்திவைக்கப்படும்

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணங்களுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மீண்டும் ஒத்திவைக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியாகும் என தேர்தல் திணைக்களத்தின் சிரேஷட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பிரதிநிதிகளை நியமிக்க 2002ஆம் ஆண்டு வேட்பு மனுக்கள் கோரப்பட்டன எனினும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான நிலவரம் இன்மையினால் அத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (ச-4)

## அதிகரித்த சம்பள உயர்வு

(பொன்னாலை)

யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக் களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்,ஊழியர்களுக்கான அதிகரித்த சம்பள உயர்வு ஏப்ரல் மாதச் சமபள நிலுவையுடன சேர்த்து வழங்கபபட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஒரே நேரத்தில் வழங்குவதன் பொருட்டு ஏப்ரல் மாத வேதனத்துடன் இக் கொடுப்பனவு நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது. (து-49)

## நபிகள் நாயகத்தின் பிறந்ததின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீசத்திய சேவா நிலையத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நபிகள் நாயகத்தின் பிறந்ததின விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக்கின் சிறப்புசொற்பொழிவு இடம்பெறும். (7)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை போயா தின ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயணசேவையுடன் நிறைவுபெறும.(7)

## கண்காட்சி

(பருத்தித்துறை)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலகப்பிரிவு மாதர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் தையல், மனையியல் கண்காட்சி இன்று நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கண்காட்சி நிகழ்வில்,மேலதிக அரச அதிபர் ஏ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.கௌரவ விருந்தினராக மகளிர் அரசியலதுறைப் பொறுப்பாளர் செல்வி என. அன்பு கலந்துகொள்கிறார். (த:7-52)

## புதிய அரைக்கும் ஆலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு-நயினாதீவு பல நோக்குக கூட்டுறவுச் சங்கத்தினால் சந்தையடியில புதிய அரைக்கும் ஆலையொன்று கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (7-126)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

திக்கம் மடத்துவாசல் அருள் மிகு சித்திவிநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிககிழமை காலை 8.25 மணிக்கு மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் வியாழக் கிழமை இடம்பெறும். (7-21)

## வருடாந்த ஒன்றுகூடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் 26ஆவது வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு நகரசபை மண்டபத்தில் செயலாளர் குணமணிதேவி அறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (7-21)

## கசிப்புக் காய்ச்சியவர் பொலிஸாரால் கைது

(கல்வியங்காடு)

உரும்பிராய் கிழக்குப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 232றாம்ஸ் கசிப்பும் 2472 றாம்ஸ் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சும் உபகரணங்களையும் கைப்பற்றியதாக கோப்பாய் பொலிஸ் அதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்தார். (க-74)

## *இளைஞனைக் காணவில்லையென யாழ். பொலிஸில் முறைப்பாடு*

(யாழ்ப்பாணம்)

இளைஞனைக் காணவில்லையென யாழ். பொலிஸ் நிலையதத்தில் கடந்த வெள்ளியன்று முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டேவிட் மரியநாயகம் (வயது-29) என்ற இளைஞனை கடந்த மாதம் 19ஆம் திகதியில் இருந்து காணவில்லை என அவரது சகோதரி ரிச்சட் அருள்மலர் கடந்த வெள்ளியன்று யாழ். பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ற-19)

## விழிப்புணர்வுப் பிரசாரம்

(திருநெல்வேலி)

புன்னாலைக்கட்டுவன்,ஏழாலை, வளலாய், தெல்லிப்பழை பகுதிகளில் ஐக்கிய சிறுவர் நிலையத்தின ஏற்பாட்டில் மிதிவெடி தொடர்பாக விழிப்புணர்வுப் பிரசாரங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்தப்பகுதிகள் உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ளதாலேயே இப்பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-43)

# பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் களனி ஆற்றில் பாய்ந்து தற்கொலை

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் ஒருவர் களனி ஆற்றில் பாய்ந்து தற்கொலைசெய்துள்ளார்.

அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இவர் கைவிலங்கு இடப்பட்ட நிலையில் அதிரடிப் படையினரின் வாகனத்தில் களனி ஆற்றுப் பகுதியால் கொண்டு சென்ற வேளையிலேயே வாகனத்திலிருந்து ஆற்றில் பாய்ந்துள்ளார்.

கை விலங்கிடப்பட்டிருந்ததினால் நீந்த முடியாது ஆற்று நீரில் மூழ்கி மரணமானதாகக் கூறப்படுகிறது. இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

நந்தனரசிக்ககுமார (வயது-29) என்ற மேற்படி பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் கடந்த 14 ஆம் திகதி விசேட அதிரடிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கொலன்னாவைப் பகுதியை ஆட்டிப்படைத்து வந்த இவர், கடுவெலரணால பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட வரிடமிருந்து கைக்குண்டு ரி 56 துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தும் ரவைகள் என்பன மீட்கப்பட்டன. பின்னர் கைவிலங்கு போடப்பட்ட நிலையில் விசேட அதிரடிப் படையினரால் அவர்களது வாகனத்தில களனி ஆற்றுப் பகுதி வழியாகக் கூட்டிச் சென்றுள்ளனர். அந்த வேளையிலேயே திடீரென அவர் ஆற்றில் பாய்ந்துள்ளார். (க)

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர் - குறள்

வலம்புரி

# உயிரெடுக்கிறது ஜே.வி.பி பிரித் ஓதுகிறது பௌத்த பீடம்

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் இருக்கக்கூடிய சிக்கல்கள் தடைகள் பற்றி அறிந்திருந்தாலும் அவை எந்தவடிவத்தில், எங்கிருந்து எப்படிவரும் என்பதை கூறமுடியாதவாறு நிலைமையுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத்திட்ட வரைபு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஐக்கியதேசியக்கட்சியுடன் நடத்திய சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையில் விடுதலைப்புலிகளால் நம்பிக்கையுடன் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத்திட்ட வரைபை ஆராய்வதற்கு கூடமுன்வராத சிங்கள அரசு தமிழ்மக்களுக்கு எதனையும் தரப்போவதில்லை என்பது தெரிந்த விடயம் இருந்தும் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் சிங்கள அரசின் கபடத்தனத்தை நம்புகின்ற நாடுகள் இன்னமும் இருக்கவே செய்கின்றதென்பதை எண்ணுகின்றபோது அதன் முடிபு துன்பம் தருவதாக உள்ளது.

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது போல உலக அரங்கில் நடித்துக்கொள்வதில் காலத்தை கடத்தும் இலங்கை அரசு சர்வதேசத்தின் உதவிகளை பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறது.

குறிப்பாக 'சுனாமி'ஏற்படுத்திய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உலகநாடுகள் விரைந்து உதவிசெய்தன. ஆனால் அந்த உதவிகள் இதுவரை பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக சென்றடையவில்லை என்ற செய்தி வெளிவராத உண்மை.

சுனாமியால் தங்கள் உறவுகளை பறிகொடுத்த மக்கள் வாழ்க்கையில் வெறுப்புற்றிருக்கின்ற இந்நேரத்தில் அவர்களை ஆற்றுப்படுத்துவது எமது தலையாய கடமையாகும்.

அதிலும் மதபீடங்கள் அதனைச்செய்வதில் பின்னிற்கலாகாது. எனினும் பௌத்த பீடங்களை பொறுத்தவரை அவை சுனாமிக்குள்ளும் இனவாதத்தை தேடித்திரிகின்றன. சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதற்கு பௌத்தபிக்குகள் தடை விதிப்பதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

உலக நாடுகள் இன, மத, மொழி வேறுபாடு இன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிசெய்ய பௌத்த பிக்குகளோ அந்த உதவிகள் சிங்கள மக்களுக்கே கிடைக்க வேண்டும் என்பதில் மிக இறுக்கமாக இருக்கின்றனர்.

அதனை வெளிப்படுத்துவதாக பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் வகையில் பிக்குகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கையெழுத்து வேட்டை அமைந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எதிர்ப்புத்தெரிவித்த பிக்குகள் இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிகிடைப்பதை தடுப்பதிலும் ஈடுபட்டுள்ளன. இவை ஒரு புறத்தில் நடைபெற்றுக்கொண்டு இருக்க மறுபுறத்தில் தமிழீழம் என்னும் குழந்தையின் பிரசவத்திற்கு வெளிநாடுகள் உதவிசெய்வதாக ஜே.வீ.பியின் பிரசார செயலாளர் விமல்வீரவன்ச கொட்டி முழக்குகிறார்.

ஆக ஒட்டு மொத்தத்தில் ஜே.வீ.பி இலங்கைத்தாயின் உயிரை எடுக்க முயற்சிக்க, அந்த உயிர் எடுப்பிற்கு பௌத்த பீடங்கள் பிரித்தோதி ஆசி வழங்குகின்றன.

# யாழ். மாவட்டத்தில் யுத்தம், சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கென உலக வங்கியின் உதவியுடன் வீடுகள் நிர்மாணிப்பு

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு திட்டத்தின் ஊடாக இந்த வருடம் யாழ்மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரம் வீடுகளும், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 110 வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பகுதியாக சேதமடைந்த வீடுகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவு 4 கட்டங்களாக வழங்கப்படவுள்ளது. அதிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து தற்போது மாதந்த வருமானம் 2 ஆயிரத்து 500 ரூபாவிற்குக் குறைவாகப் பெறுபவர்களுக்கே இவ்வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள 110 வீடுகளும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவிலே நிர்மாணிக்கப்படவுள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் அமைக்கும் திட்டத்தில் யாழ்ப்பாணத்தில் 90 வீடுகளும், நல்லூரில் 90 வீடுகளும், சண்டிலிப்பாய் 85 வீடுகளும், சங்கானையில் 70 வீடுகளும், உடுவிலில் 85 வீடுகளும் , தெல்லிப்பழையில் 65 வீடுகளும், கோப்பாயில் 125 வீடுகளும் , சாவகச்சேரியில் 125 வீடுகளும், பருத்தித்துறையில் 70 வீடுகளும், கரவெட்டியில் 70 வீடுகளும், வேலணையில் 40 வீடுகளும், ஊர்காவற்றுறையில் 40 வீடுகளும், நெடுந்தீவில் 30 வீடுகளும், காரைநகரில் 15 வீடுகளும் அமைத்துக் கொடுப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பிரதேச செயலர்பிரிவிலும் தலா 3 பேர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டு வீடுகளை அமைப்பதற்கான இடங்களை தெரிவுசெய்தல் உள்ளிட்ட ஆரம்பக் கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ரு-19)

# கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை குறித்து மாறுபட்ட தகவல்கள்

பொலநறுவை மாவட்டம் சொருவில் கிராமத்தில் கருணா அணியினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் தொடர்ந்தும் வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

சில இணையத்தளங்களும், ஊடகங்களும் இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திகளில், இந்த தாக்குதலில் கருணா அணியைச் சேர்ந்த 9 பேர் கொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் அருலங்கவிலப் பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் 5 சடங்களையே மீட்டுள்ளனர். இதனைத் தவிர மேலும் இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாரால் மீட்கப்பட்டு வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ள 5 சடலங்களில் நேற்று முன்தினம் மாலை வரை 3 சடலங்களே அடையாளம் காணப்பட்டுள்ளன.

சொருவிலைச் சேர்ந்த தேவதாசன் தெய்வேந்திரன் மற்றும் ஜேம்ஸ் கந்தசாமி கிருஸ்ணகுமார், வெலிக்கந்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த கந்தையா கிருஷ்ணபிள்ளை என உறவினர்களால் அந்தச் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு நேற்று முன்தினம் மாலை பொறுப்பேற்கப்பட்டன.

இந்தத் தாக்குதலின்போது அந்த முகாமில் தங்கியிருந்த ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பின் முக்கியஸ்தரான விஜயன் எனப்படும் இராஜேந்திரன் பேரின்பநாதன் என்பவரும் கொல்லப்பட்டுள்ளதாகவும், இவர் சிலர் மாதங்களுக்கு முன்பே தமிழ்நாட்டின் சேலத்தில் இருந்து நாடு திரும்பியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தாக்குதலுக்கு உள்ளான கருணா அணியினரின் இந்த முகாமில் இருபதுபேர் வரை தங்கியிருந்திருக்காலமென ஊகிக்கமுடிவதாக அருலங்கவிலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரு-4)

# மின்சார சபையை தனியார் மயப்படுத்துவது குறித்து பாராளுமன்றமே தீர்மானிக்குமாம்

## பி.பீ.ஜயசுந்தர தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையை தனியார்மயப்படுத்துவது தொடர்பான விடயத்தை தீர்மானிக்கும் அதிகாரத்தை பாராளுமன்றத்திடம் கையளிப்பதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆவணங்கள் ஏற்கனவே அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இவற்றின் மூலம் இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான கட்டமைப்பொன்றும் முன்வைக்கப்பட்டிருப்பதாக திறைசேரி செயலாளர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து அமைச்சர்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன எனவும், இலங்கை மின்சாரசபை தனியார் மயப்படுத்தப்படுமாயின் அதற்கு இப்போது அமுலிலிருக்கும் 1983 ஆம் ஆண்டின் அரச சொத்துக்களை தனியார் மயப்படுத்தல் சட்டத்தின்கீழ் இந்த யோசனையைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், ஆனால் மறுசீரமைப்பிற்கு அந்த சட்டத்தின்கீழ் யோசனையைச் சமர்ப்பிக்கவேண்டிய தேவை ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

சபையைத் தனியார்மயப்படுத்த அமைச்சரவை தீர்மானம் எடுத்தாலும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைமூலம் அது நிறைவேற்றப்படவேண்டும் எனவும் திறைசேரி செயலாளர் மேலும் தெரிவித்தார். (க-4)

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 22 500 வீடுகள் அமைக்கப்படும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் வடக்கு கிழக்கில் சேதமடைந்த 22 ஆயிரத்து 500 வீடுகளை மீண்டும் கட்டுவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி நீர் வழங்கல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அரசாங்க நிறுவனங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் 71 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொன்றும் 10 பேர்ச் காணியில் 500 சதுரஅடி பரப்பைக் கொண்டவையாக சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் 20 அரச சார்பற்ற நிறுவனங்கள் 5 ஆயிரத்து 312 வீடுகளையும் , மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 558 வீடுகளை 15 அரச சார்பற்ற நிறுவனங்களும் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேபோல திருகோணமலை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 671 வீடுகளும், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 191 வீடுகளும் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன. (க-7-9)

# சட்டவிரோதமாக பனைதறிப்பு; பொலிஸாருக்கு அக்கறையில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சட்டவிரோதமானமுறையில் பனை மரங்களைத் தறித்து அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்வது குறித்து பொலிஸார் அக்கறைசெலுத்துவதில்லை என பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் குற்றம்சாட்டியுள்ளது.

குடாநாட்டில் இராணுவப் பாதுகாப்பு வலயக் கெடுபிடிகள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்கள் காரணமாக பொது மக்கள் மீளக்குடியமரச் சென்றிராத பிரதேசங்களில் இத்தகைய சட்டவிரோத புனைமரத்தறிப்பு நடவடிக்கைகள் நடக்கின்றன.

இதனால் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பனைவளத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனரென பனை, தென்னைவள அவிவிருத்திச் சங்கங் களின் சமாசம் சுட்டிக்காட்டியுள்ளது. (க-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பு'ஜை விரதம், கோவில் தரிசனம், வேண்டுதலை நிறைவேற்றுவது சாஸ்திரப் படிப்பு போன்றவை மட்டுமே வாழ்வில் இருந்தால் அது சாதாரண சமய வாழ்க்கையாகும். அதாவது நம் வாழ்விலுள்ள மற்ற முக்கியமானவர்களுள் கடவுளும் ஒருவர் அவ்வளவுதான் அப்படிப்பட்ட சமய வாழ்க்கை நம் திருப்திக்காகத்தான் இறைவனுக்காகஅல்ல.

சுவாமி விவேகானந்தர்

# புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் 12 அமெ. படைத்தளபதிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக கும், அரசாங்கத்திற்கும் இடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்ட பின்னர் அமெரிக்காவின் முக்கிய படைத்தளபதிகள் 12பேர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண் டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள அதி உச்ச அக்க றையினை இந்தவிஜயங்கள் எடுத் துக்காட்டுவதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

பிராந்தியத்தில் தனது இராணுவ மேலாண்மையை நிலைநிறுத்தும் நோக்கிலேயே அமெரிக்கப்படை அதிகாரிகள் இலங்கைக்கு விஜயத் தினை மேற்கொள்வதாக தெரிவிக் கப்படுகிறது.

இலங்கைக்கு இராணுவ ஒத் துழைப்பினை வழங்கும்போர்வை யில் தனது படைத்துறைப்புலனா ய்வாளர்களை இலங்கையில் நிலை கொள்ளச்செய்வதே அமெரிக்காவின் முக்கிய நோக்கமாகும்.

இந்தியாவின் இராணுவ நகர் வுகள் அணுவாயுத தயாரிப்பு நட வடிக்கைகளை கண்காணிப்பதற் கான கேந்திரநிலையமாக இலங் கையினை அமெரிக்கா பயன்படுத்தி வருவதாக இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா புரிந் துணர்வு ஒப்பந்தமொன்றினை செய் திருப்பதாகவும் அமெரிக்கப்புல னாய்வு நடவடிக்கைக்கு தளம் அமைப்பதற்கு இடம் அளிப்பதற்கு பதிலாக இலங்கைக்கு இராணுவ ஒத்துழைப்பினை வழங்க அமெரிக் கா இணங்கியுள்ளதாகவும் தெரி யவரும் அதேவேளை இதனடிப் படையிலேயே 'கரோஸ்' என்ற அமெரிக்க கடற்கண்காணிப்புக் கப் பல் மிகக்குறைந்த விலையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இலங்கையின் முக்கிய புலனாய்வு அதிகாரிக ளுக்கு அமெரிக்காவில் அதிநவீன புலனாய்வுப்பயிற்சிகளை அமெரிக்கா வழங்கிவருவதாகவும் இது குறித்து இந்தியா அதிருப்தி அடைந்திருப்ப தாகவும் ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பி டத்தக்கது. (ரு-4)

# பாணுக்கு விலைக் கட்டுப்பாடு இரு வாரத்தில் அறிவிக்கப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாரங்க ளுக்குள் பாணின் விலையை கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியு மென வர்த்தக நுகர்வோர் அமைச் சர் ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டங்கள் பாணின் விலையை கட்டுப்படுத்து வதற்குப் போதுமானவையானதாக வில்லை. இதனால் பேக்கரி உரி மையாளர்கள் பல விலைகளில் பாணை விற்பனை செய்கின்றனர் எனினும் எதிர்வரும் இரண்டு வார காலத்துக்குள் பாணின் விலையை கட்டுப்படுத்துவதற்காக நிர்ணயி கப்பட்ட புதிய விலை வர்த்தமா மூலம் வெளியிடப்படும்.

பதினேழு முதல் முப்பத்து ஐந்து ரூபாவரை பேக்கரி உரி மையாளர்கள் பாணை விற்பனை செய்து வருவது குறித்து அறி விக்கப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் பாண் ஒன்றின் எடை 450 கிராமாக இருப் பதில்லையென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ரு-8)

# க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறு மீளாய்வுக்கு 30 வரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய் வதற்கான விண்ணப்பங்களை இந்த மாதம் 30 ம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை மூலம் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபரினூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியா கவும் இவ் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

இந்தத்தடவை பரீட்சையில் தோற்றியவர்களில் 45.4 சதவீதமா னோர் க.பொ.த உயர்தரத்தில் கற் பதற்கு தகுதி பெற்றுள்ளார்கள்.

கணிதம்', ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி பெற்றோரின் தொகை கடந்த வருடத்திலும் பார்க்க இந்த வருடம் அதிகமானது என்றும் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை இந்த வருடத்திற் கான க.பொ.த உயர்தரப்பரீட்சை யை நடாத்துவதற்கான ஒழுங் கள் பூர்த்தியடைந்துள்ளனள என் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் யூன் மாதம் ஆறாம் திகதி தொடக்கம் யூலை மாதம் முதலாம் திகதிவரை இப்பரீட்சை நடைபெறும்.சுனாமியினால் பாதிக் கப்பட்ட பகுதிகளிலுள்ள மாணவர் களின் வசதிக்காக இந்த மாதம் நடைபெறவிருந்த உயர்தரப்பரீட்சை யூன் மாதம் வரை பிற்போடப்பட் டது என அவர் குறிப்பிட்டார்.(ரு.4)

# பிரதேச செயலரின் கொலைக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் திருக்கோ வில் பிரதேச செயலாளர் ஏ.கே. தவராஜாவின் படுகொலையை விடு தலைப்புலிகள் கண்டித்துள்ளனர்.

இது குறித்து மட்டு.அம்பாறை அரசியல் பிரிவு அறிக்கையென் றைவெளியிட்டுள்ளது. புத்திஜீவி களை கொல்வதன் மூலம் தமிழ் தேசியத்தை பலவீனப்படுத்தலாம் என நினைக்கும் தேசவிரோதசக் திகளே இக்கொலையை புரிந்துள் ளன.

40 வயதுடைய திருக்கோவில் பிரதேச செயலரான ஏ.கே.தவராஜா நேற்று முன்தினமிரவு இனந்தெரி யாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.அப் பிரதேசத்தில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு விட்டு தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு மோட்டார்சைக்கிளில் திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் இந் தச்சம்பவம் இடம் பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிரதேசம் மெனகருதப்பட்ட திருக்கோவிலில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரு வரால் இவர் சுடப்பட்டதாக தெரி விக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் 2பேர் தொடர்புபட்டிருப்பதாக பொலிஸ் விசாரணையின் போது தெரியவந் துள்ளபோதிலும் இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-7,4)

# இரா.பத்மநாதன் காலமானார்

(கொழும்பு)

முதுபெரும் பத்திரிகையாளர் இரா.பத்மநாதன் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

1929ம் ஆண்டு பிறந்த இவர் இலங்கைப [illegible] முன்னணி பத்திரி கைகளில் ஆசிரியராக கடமையாற் றியுள்ளார் அத்துடன் வானொலி யிலும் நிகழ்ச்சித்தயாரிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

கலாபூசணம், கலாபாரதி போன்ற பட்டங்கள் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். (த-8)

# மின்சார சபை நட்டமடைய அனுருத்தவே காரணம்

## ரவி கருணாநாயக்க எம்.பி

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி யின் தொழிச்சங்க நடவடிக்கைக ளினால் அரசாங்கத்துக்கு மின் விநியோகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலை ஏற்பட் டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட் சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள் ளார்.

மின்சார பாவனையாளர்களுக்கு குறைந்த செலவில் நிறைந்த ஒரு சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியது அர சாங்கத்தின் கடமையாகும்.எனினும் கூட்டமைப்பு அரசாங்கம் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற தவறி யுள்ளது.

முன்னாள் மின் சக்தி அமைச் சர் அனுருத்த ரத்வத்தவின் பதவிக் காலத்தின்போதே மின் விநியோ கத்தை தனியார் மயமாக்கும் திட் டம் ஆரம்பிக்கப்பட்டது.

லாபம் பெற்று வந்த மின்சார சபை குறிப்பிட்ட ஆட்சிக்காலத் தில் பெருமளவு நட்டம் அடைந் ததாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (த-8)

# வாழ்கைச்செலவை குறைக்க மாநாடு

நாட்டில் அதிகரித்துச் செல்லும் வாழ்கைச்செலவைக் குறைக்கும் நடவடிக்கைகள் பற்றி ஆராயும் விசேட மாநாடொன்று நாளை மறு தினம் நடைபெறவுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலை மையில் நடைபெறவுள்ள இம் மாநா ட்டில் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட் சிகளின் தலைவர்கள் கலந்து கொள் ளவுள்ளனர். கூட்டுறவு மொத்த விற் பனை ஸ்தாபனத்திற்குப் பதிலாக மாற்று நிறுவனமென்றை அமைப் பது மற்றும் போக்குவரத்து சேவையை விஸ்தரிப்பது குறித்தும் இம் மாநாட் டில் கலந்துரையாடப்படவுள்ளது.(ச8)

# பொலநறுவை....

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்

இதேவேளை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் பாதுகாப்பு நட வடிக்கைகள் பலப்படுத்தப் பட் டுள்ளதாக படைத்தரப்பு தெரிவிக் கின்றது.

விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து பாது காப்பு நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ளனர். பிரதான வீதிகள், குறுக் குவீதிகளில் கண்காணிப்பு நடவ டிக்கைகளை மேற்கொள்ளு கின்ற னர்.

அத்துடன் சோதனை நிலை யங்களில் சோதனைநடவடிக் கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன. (ச-08,06)

# பேச்சுத்தவிர்ந்த...

வடமாகாண முஸ்லிம்களின் பிரச் சினைகளை நேரில்கண்டறிந்து கொள்வதற்காக நேற்று புத்தளம் நுரைச்சோலை ஆலங்குடா பகுதி களுக்கு விஜயம் செய்த எரிக் சொல் ஹெய்ம் அப்பகுதி மக் கள்மத்தியில் உரையாற்றினார்.

வடகிழக்கில் மிகவிரைவில் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படு வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப் பட்டு வருகிறது.எனினும் இது மிக சிக்கலான காரியம் ஆகும். இருப் பினும் சுனாமியால் அழிந்து போயுள்ள பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவது மனிதாபிமான செயற்பாடாகும் இனப்பிரச்சினைக் கான தீர்வைப்பெறுவதற்கான ஒரே மார்க்கம் சமாதானப் பேச்சுவார்த் தையாகும்.இதனை விடுத்து மாற்று வழியொன்றினை எவராலும் தெரிவு செய்யமுடியாது.

முஸ்லிம் களுடைய பங்களிப் புடனேயே அரசும் விடுதலைப்புலி களும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வைஅடைய முடியும். நோர்வே அரச பிரதிநிதிகளான எங்களால் இலங் கையின் பிரச்சினைகளைத் தீர்ப் பதற்கு எந்தவிதமான வற்புறுத் தல்களையும் செய்யமுடியாது இருக்கின்ற போதும், இப்பிரச்சினை யை தீர்ப்பதற்கான உத்வேகத்தை யும், ஆதரவையும் ஒருங்கிணைப் பாளர்கள் என்றவகையில் நாங்கள் வழங்கிவருகிறோம்.

சமாதான முயற்சியில் பொருத் தமான நேரத்தில் முஸ்லிம் பிரதி நிதித்துவம் உள்வாங்கப்படும் என்று விடுதலைப்புலிகளும் அரசும் உறு தியளித்துள்ளனர். அதற்கான உத் தரவாதத்தினையும் நாம் தரவிரும் புகிறோம்.

தமது பிரதேசத்தில் முஸ்லிம் கள் மீள் குடியேறுவதற்கான நட வடிக்கைகளை எடுக்க விடுதலைப் புலிகள்-அரசுக்கு பேச்சுவார்த்தை மேசையில் அழுத்தம் கொடுப்போம.

இந்நாட்டில் கொழுந்து விட்டு எரியும் இனப்பிரச்சினையைத்தீர்த்து மக்களை நிம்மதியாக வாழவைப் பதற்காகவே நோர்வே பாடுபடுகிறது வடமாகாண முஸ்லிம்களின் பிரச் சினைகள் விசேடமானவை. சமாதா னப்பேச்சுவார்த்தையின் போது அம் மக்களின் அனைத்துவிதமான பிரச் சினைகள் தொடர்பாக நோர்வே அரசாங்கம் அரசினதும் விடுதலைப் புலிகளினதும் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் என்று உறுதி யளித்தார். (ச-15,4)

# சுகவீனத்தால்...

அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் பிரதாப் தலைமை யில் வீரவணக்கக் கூட்டம் நடை பெற்றது.

பின்னர் அங்கிருந்து அலங்கரிக் கப்பட்ட ஊர்தியில் மாவீரரின் வித் துடல் பவனியாக எடுத்துவரப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல் லத்தில் இரவு 7.30 மணியளவில் விதைகுழியில் விதைக்கப்பட்டது. (ச)

# பிரதேச செயலரின்...

பிரதேசத்துக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட பிரதேச செயலாளரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன. அம்பாறை மாவட்ட அரச அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள், அரச அதிகா கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். அத்துடன் இவரின் கொலையைக் கண்டித்து புலிகள், அரசாங்கம் அறிக்கைகள வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ச-08)











நிறைஞ்சனாஸ்
11.00,2.45,6.00 மணிக்கு சங்கானை
பிரசன்னா, அனு, வடிவேல் நடித்த
காதல் டாட் காம்
விரைவில் எதிர்பாருங்கள்
ஜெய்ஆகாஷ், ராஜ்கிரண் நடித்த
செவ்வேள்
இலங்கை, இந்தியாவில் ஒரேநாள் வெளியீடு




**பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை**

பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை. சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் (யாழ். நகரமையத்திலிருந்து [illegible]. கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டும்)
18-04-2005 இன்று திங்கட்கிழமை காலை 10மணிக்கு நேரில் வரவும்.

**ஆளணி முகாமையாளர், வலம்புரி**


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.